DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan, Broker
Joy H. Selvanayagam, Broker
Homelife/Future Reality Inc., Brokerage

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
Ragu Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX Community

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Affidavits for Immigration purposes;
Kokulan Baskaran
Tel : 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA Mortgage Solutions Inc.
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது ஆண்டை நோக்கி

Towards 25th Year in Publishing

www.uthayannews.ca

UTHAYAN

# உதயன்

திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

$1.00

Tel : 416-752-1524
Fax: 416-752-6703

உதயம் 1291 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 1, 2021

## தனது 25 வது வெள்ளி விழா ஆண்டில் கால் எடுத்து வைக்கின்றான், உங்கள் ‘கனடா உதயன்’

மேற்குலக நாடுகளில் சென்று குடியேறுவது என்ற விருப்பத்தோடு வந்த தமிழ் மக்களுக்கு, ஏனைய நாடுகளைப் போல கனடிய தேசமும் கரங்கூப்பி வரவேற்று, வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருந்து அவர்களை தனது பிரஜைகளாகவும் ஏற்றுக்கொண்டது. கனடாவில் குடியேறிய ஏனைய இன மக்களைப் போன்றே வெற்றியாளர்களாகத் திகழும் எம்மவர்களோடு சேர்ந்து நாமும் இன்றைய நாளைக் கொண்டாடுகின்றோம்.


உலகில் ஏனைய நாடுகளைவிட, மிகவும் தாராளமாக பல்லின கலாச்சாரத்திற்கு மதிப்பளித்து எமது கலை, கலாச்சார, பண்பாட்டுக் கோலங்களை இந்த மண்ணில் நாமே தொடர்வதற்கு திறந்த மனதோடு சந்தர்ப்பம் வழங்கிய இந்த கனடிய தேசத்தின் மேன்மையை நாம் போற்றிடுவோம். அத்தகைய சுதந்திரத்தின் ஒரு அங்கமாகவே, இன்று கனடா உதயன் பத்திரிகையானது, எவ்வித தடையும் இன்றி தனது 25வது வெள்ளி விழா ஆண்டில் கால் பதிக்க காரணமாக இருந்தது என்பதையும், எமக்கு கடந்த கால் நூற்றாண்டு காலம் துணையாக நின்ற வாசகர்கள், வர்த்தகப் பெருமக்கள், சமூகத் தலைவர்கள், கலை இலக்கிய நண்பர்கள், மற்றும் கனடாவின் மத்திய, மாகாண, உள்ளாட்சி

கனடா உதயன் பத்திரிகையின் வெள்ளி விழா ஆண்டு 2021
ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரை
பல்வேறு நிகழ்வுகள், கலந்துரையாடல்கள் மற்றும் பயனுள்ள உரைகள்,
இசை நிகழ்ச்சிகள்.. காத்திருங்கள்...
uthayannews@yahoo.com
http://www.uthayannews.ca
மற்றும் http://www.nanban.ca
மேலதிக விபரங்கள் விரைவில்...
25 CELEBRATING 25 YEARS

அரசுகளுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

வெள்ளிவிழா ஆண்டை நாம் அனைவரும் களிப்புடன் கடந்து செல்வோம் என்ற வார்த்தைகளோடு 2021 ஆண்டிற்குள் நாம் புகுவோமாக!

## விமானம் மூலம் கனடாவிற்கு வருபவர்கள் கோவிட்-19 பரிசோதனையில் ‘எதிர்’ பெறுபேற்றைப் பெற்றவர் என்பதை உறுதி செய்யவேண்டும்



வேறு நாடுகளிலிருந்து விமானங்கள் மூலம் கனடாவிற்கு வருபவர்கள் தாங்கள் விமானமேறும் நாடுகளில் செய்யப்பட்ட கோவிட்-19 பரிசோதனையில் எதிர் பெறுபேற்றைப் பெற்றவர் என்பதை உரிய பத்திரங்கள் மூலம் உறுதி செய்யவேண்டும் என்ற கட்டுப்பாடு ஒன்றை கனடாவின் மத்திய அரசு நேற்று புதன்கிழமை அறிவித்தது

அறிவித்ததுகனடாவின் மத்திய அரசானது ஏற்கெனவே மார்ச் மாதமளவில் விடுத்த அறிவித்தல் ஒன்றில் அவசியமற்ற பிரயாணங்களை கனடியர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், இன்னும் அந்த கட்டுப்பாடு நடைமுறையில் உள்ள நிலையில், முக்கியத்துவம் அற்ற பிரயாணங்களை மேற்கொண்டுவிட்டு கனடாவிற்கு திரும்பி வருபவர்கள் தொடர்பாக அரசாங்கம் கடுமையாக இருக்க வேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக கனடாவின் மத்திய அரசின் பொதுப் பாதுகாப்பு விவகாரங்களுக்கு பொறுப்பான அமைச்சர் பில் பிளயர் அவர்கள் கருத்து தெரிவிக்கையில் “கனடியர்கள் தேவையற்றதும் முக்கியத்துவம் அல்லாததுமான பிரயாணங்களை மேற்கொள்ளுவதை நாம் கடுமையாக கண்டிக்கின்றோம். அதற்காவே இந்த கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. எனவே நாம் மக்களிடத்தில் வேண்டிக் கொள்வது என்னவென்றால், அரசாங்கத்தின் எச்சரிக்கைகளுக்கு இணங்க மறுத்து தாங்கள் நினைத்தது போன்று கனடாவிற்கு வெளியே பயணிப்பவர்கள் தொடர்பாக நாம் கடுமையான நிபந்தனைகளை விதிக்கவுள்ளோம். இவ்வாறான கடுமையான விதிகள் புத்தாண்டுக்குப் பின்னர் வெளியிடப்படும். அவற்றுள் ஒன்று தான் இந்த கோவிட்-19 பரிசோதனை செய்த அத்தாட்சிப் பத்திரம். அந்தப்பத்திரமானது, ஒரு பிரயாணி கனடாவை வந்தடையும் நாளிலிருந்து மூன்று நாட்களுக்கு உட்பட்டு பரிசோதனை செய்ததை நிரூபிக்க வேண்டியிருக்கும்” என்றார்.

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8
416.568.4301, 905.471.4050

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX Realtron AD Team

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 794 4404

# MORTGAGE SOLUTIONS

## $50,000 EQUITY LOAN

GET APPROVED WITHIN 24 HOURS

416.298.2777

$375 Mo.

www.mortgageSolutions.ca

MONTHLY SAVING $2,478

SAVE UPTO 75% REFINANCE



KIRUBA THANABALASINGHAM

Mortgage Agent Lic# M12002440

Ultimate Mortgage Group Lic 11995

info@mortgageSolutions.ca

Off: 416.298.2777

Dir: 416.894.9122

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.39% | | $1,563.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,563.00 |

## MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com



GHURUS TOWING

Forklift / Machinery move
Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire

We pay scrap up to $1000



NIRMALAN (ROGER):
(416) 990-7777
(416) 984-7777

COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

VARUNAN:
(416) 894-6244


உதயன் கதிரோட்டம்

# அரசியலில் செலுத்த வேண்டிய 'ஆர்வம்' திசைமாறிச் சென்று 'ஆவேசமாக' மாறிவிட்டதா?

ஒரு இனத்திற்கோ அன்றி ஒரு தேசத்திற்கோ தலைவனாக வர விரும்புகின்றவன் தன்னை அவற்றிக்காக இழப்பதற்கு தயாராக இருக்க வேண்டும் என்பார்கள் சில நேர்மையான அரசியல் போக்கு கொண்டவர்கள். ஒரு தேசத்திற்கு தலைவனாக வரவிரும்புகின்றவன் அரசியல் என்னும் பாதை வழியாக நீண்ட தூரம் நடந்து சென்றே அந்த இலக்கை அடையவேண்டும். அது மிக அவசியமான ஒரு விடயமாக கருதப்படுகின்றது.

ஆனால் அரசியலும் அரசியல்வாதிகளும் மேற்க் கூறிய வழிகளில் நடந்து கொள்கின்றார்கள் அல்லது அதை கடைப்பிடிக்க முயலுகின்றார்களா என்பதை பொதுஜனம் கவனிப்பதாகவே இல்லை. இதனால் சேவை செய்ய வேண்டும் என்ற ஆர்வம் கொண்டு வரவேண்டிய அரசியல் தளம் தற்போது ஆவேசம் கொண்டவர்களின் கூடாரமாகிவிட்டது.

கடந்த சில நாட்களாக அல்லது வாரங்களாக இலங்கையிலும் இந்தியாவிலும் இடம்பெற்றுவரும் அரசியல் சார்ந்து சம்பவங்கள் மற்றும் உரையாடல்கள் ஆகி-யன அரசியலில் இருக்க வேண்டியப ல அம்சங்களை உதறி வீசி விட்டுச் செல்வது போன்ற காட்சிகளை எமது கண்களுக்கு முன்னே கொண்டு வருகின்றன. இலங்கையில் தமிழர் பகுதிகளிலும் இந்தியாவில் தமிழ்நாட்டிலும் அரசியல் பதவி-கள் தொடர்பாக இடம்பெறுகின்ற கருத்துப் பரிமாறல்களும் கண்டனங்களும் சொந்த நலம் சார்ந்தவையாகவே அதிகளவில் காணப்படுகின்றன.

இலங்கையின் வடக்குப் பிராந்தியத்தின் கேந்திரமாக விளங்கும் யாழ்ப்பாண மாந-கர சபையானது அந்த மண்ணில் ஒருங்கே இணைந்து நிற்கும் கம்பீரத்திற்கும் கனதியான அறிவாற்றலுக்கும் ஒரு கலங்கரை விளக்காக விளங்கியது. புல கற்றவர்கள் யாழ்ப்பாண மாநகரை காத்து வளர்த்து அழகுள்ள ஒரு நகரமாக்கி மக்களை அங்கு நிம்மதியோடு வாழ வைத்தார்கள். மத்திய அரசின் பார்வைக்கு உட்பட்டு யாழ்ப்பாண மாநகரசபை இருந்தாலும் அதன் தனித்துவத்தை பாதுகாப்பதில் யாழ்ப்பாண மண்ணின் மைந்தர்கள் கண்ணியமாக உழைத்தார்கள். ஆனால் தற்போது, அரசியல் பதவி என்ற அந்த அதிகாரமிக்க இடத்தை அடைவதற்காக எங்கிருந்தெல்லாம் அந்த மண்ணிற்கு நாம் மேற்சொன்ன 'ஆவேசத்தோடு' வந்து ஊடுறுவி நின்று, குழப்பங்களை ஏற்படுத்தி அங்கு நிம்மதி குலைந்த ஒரு நிலையைத் தோற்றுவித்துள்ளார்கள்.

சாதாரண பதவிகளுக்குக் கூட கட்சிச் சாயங்களைப் பூசி முதலில் நண்பர்களைப் பிரித்து பின்னர் மக்களைப் பிரித்து, தொடர்ந்து சமூகத்தையும் சமூதாயத்தையும் சின்னாப்பின்னமாக்க காரணமாக இருக்கும் இந்த கட்சி அரசியலுக்கு எமது மக்கள் தடையொன்றை போட வேண்டிய தேவை வந்து விட்டது என்றே கருதுகின்றோம். இதைப் போலவே தமிழ்நாட்டிலும் சினிமா மூலம் மக்கள் மத்தியில் தங்களை பெயர்களை அடையாளமாகக் காட்டிக் கொண்டவர்கள் தற்போது மக்கள் மீது தங்கள் அதிகாரங்களைக் காட்டும் முயற்சியில் பதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக அரசியல் களத்தில் குதித்துள்ளார்கள்.

மக்களுக்கு சேவைகளைச் செய்யாமல் திடீரென வந்து அரசியல் பதவிகளுக்குரிய ஆசனங்களில் அமர்வதற்கு அங்கு ஆவேசத்தோடு பயணிப்பவர்களை தமிழகத்து மக்கள் கண்டுவருகின்றார்கள்.

ஆனால், இலங்கையிலும் இந்தியாவிலும், கொரோனாவின் வீரியம் அதி-கமாக இருந்தாலும் சமூகத்தின் நன்மையைக் கருதி சமூக இடைவெளிகளைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியத்தை மறந்தவர்களாக மக்களை சேர்த்துக் கொண்டு பொதுவெளியில் பறந்து திரிகின்றார்கள்.

நோய்த் தொற்று தொடர்பாக வைத்தியசாலைகளில் பணியாற்றும் வைத்தியப் பெருந்தகைகள் தாதிகள் மற்றும் முன்வரிசைப் போராளிகள் ஆகியோர் தங்களை அர்ப்பணித்து போராடிய வண்ணம் வைத்தியச் சேவையாற்றிய வண்ணம் இருக்கின்றபோது, இந்த அரசியல் தளங்களில் உள்ளவர்கள், பதவிகளைக் குறி வைத்து ஓடிக்கொண்டே இருக்கின்றார்கள். இந்தியாவில் விவசாயிகளின் போராட்டம் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. எத்தனையோ விவசாயிகள் பல்வேறு காரணங்களால் அல்லது பாதிப்புக்களால் உயிர் துறந்துள்ளார்கள். ஆனால் அங்கு இந்திய மத்திய ஆட்சி பீடம் அவர்களை சாந்தப்படுத்தும் அளவிற்கு கீழிறங்கி வருவதாக இல்லை. நாட்கள் கடந்து செல்லும் போது நாடு எவ்வாறான நெருக்கடிக்குள் வீழ்ந்து விடுமோ என்ற எண்ணம் எதுவுமின்றி, தமிழ்நாட்டையும் தனது கைகளுக்குள் கொண்டு வர டெல்லி துடித்துக்கொண்டிருக்கின்றது.

இவ்வாறாக அரசியலில் ஆர்வத்துடன் வந்து மக்கள் நலன் கவனிக்க வேண்டியவர்கள் இப்போது கட்சிகள் என்ற பிரித்து நிற்கும் அரசியல் என்னும் மேடையில் ஏறுவதற்காக மக்கள் நலனையே கருதாமல், ஆவேசத்தோடு மோதுகின்றார்கள்.

இந்த விரும்பத்தகாத நிலையானது, இலங்கையிலும் இந்தியாவிலும் தொடர்வதை கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு நேர்மையான அரசியல்வாதிகளிடத்தில் உள்ளதை என்பதை மக்கள் தெரிந்து கொண்டு அதற்குரியவர்களை தேடிச் சென்று அரசியல் பதவிகள் அவர்களிடத்தில் கையளிக்கப்பட உழைக்க வேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைக்கின்றோம்.


மணமகன் தேவை

கனடாவில் வசிக்கும் யாழ்ப்பாண இந்து மதத்தைச் சேர்ந்தவரும், உயர்ந்த பதவி வகிப்பவரும், 30 வயதுடையவருமான மணமகளுக்கு, கனடாவில் வசிக்கும்படித்த மணமகன் ஒருவரை மணமகளின் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். மணமகன் 35 வயதுக்கு உட்பட்டவர் விரும்பத்தக்கது.

மேலதிக விபரங்களுக்கு:
(416) 786-5016
அல்லது dyrajah@gmail.com

அறை வாடகைக்கு உ ண்டு

Markham / Eglinton
சந்திப்புக்கு அருகில் உள்ள அடுக்கு Apartment ஒன்றில் அறை ஒன்று வாடகைக்கு உண்டு. கார் தரிப்பிடம் மற்றும் சமையல் அறை ஆகியவற்றையும் பயன்படுத்தலாம்.

Call: (647) 909-5700
(647) 448-2073




BASEMENT வாடகைக்கு உண்டு

Birchmount / Eglinton
சந்திப்பிற்கு அருகில்
2 bedroom basement with separate entrance
மற்றும் எல்லாவித வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.
Close to TTC, subway, & shopping.
குடும்பம் விரும்பத்தக்கது.

Call: (416) 821-2181


# இலங்கையில் கொரோனாவால் மரணத்தவர்களின் எண்ணிக்கை நாளையோ அன்றி மறுநாளோ 200 ஆகலாம்?

இலங்கையில் கொரோனா தொற்றால் மரணத்தை தழுவியவர்களின் எண்ணிக்கை நாளையோ அன்றி மறுநாளோ 200 எட்டலாம் என்று எண்ணிவிடக் கூடிய வகையில், இலங்கையில் கொரோனா தொற்றால் உயிரி ழுந்தவர்களின் எண்ணிக்கை 199 ஆக உயர்ந் துள்ளது.

இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 72 வயதான ஆண் ஒருவர், கொழும்பு – 10 பகுதியைச் சேர்ந்த 70 வயதான பெண் ஒருவர், கொலன்னாவை பகுதியைச் சேர்ந்த 50 வயதான ஆண் ஒருவர், கொழும்பு – 15 பகுதி யைச் சேர்ந்த 66 வயதான ஆண் ஒருவர் ஆகியோர் கொ ரோனா தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 72 வயதான ஆண் ஒருவர், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அனு மதிக்கப் பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் கொ ரோனா தொற்றால் ஏற்பட்ட நிமோனியா மற்றும் மூளைக் காய்ச்சல் காரணமாக 2020 டிசம்பர் 30 ஆம் திகதி உயி ரிழந்துள்ளார்.

கொழும்பு – 10 பகுதியைச் சேர்ந்த 70 வயதான பெண் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனு மதிக்கப் பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் கொ ரோனா தொற்றாளர் என அடையாளம் காணப்பட்ட நிலை யில் ஹோமாகம வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் கல்லீரல் நோய் மற்றும் கொரோனா தொற்றால் இரத்தம் வி'மானதால் 2020 டிசம்பர் 29 ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

கொலன்னாவை பகுதியைச் சேர்ந்த 50 வயதான ஆண் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனு மதிக்கப் பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் கொ ரோனா தொற்றாளர் என அடையாளம் காணப்பட்ட நிலை யில் ஹோமாகம வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் கொரோனா தொற்று , கடுமையான சிறுநீரக நோய் மற்றும் உயர் இரத்த அழுத் தத்தால் ஏற்பட்ட மாரடைப்பால் 2020 டிசம்பர் 29 ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

கொழும்பு – 15 பகுதியைச் சேர்ந்த 66 வயதான ஆண் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்ட போது கொரோனா தொற்றால் ஏற்பட்ட நிமோனியா மற்றும் நீரிழிவு நோயால் 2020 டிசம்பர் 29 ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

இந்த கணக்கெடுப்பின்படி இலங்கையில் கொரோனா தொற்றால் உயி ரிழந்தவர்களின் எண்ணிக்கை இன்று 199 ஆக உயர்ந்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# ஜெனிவாவை நோக்கித் தமிழ்த் தரப்பு ஒன்றுபடுமா?

## தமிழ் அரசியலில் குடிமக்கள் சமூகங்களின் செல்வாக்கு

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



கடந்த செவ்வாய்க்கிழமை தமிழ் கிளிநொச்சியில் ஒரு சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. மன்னாரைச் சேர்ந்த தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட அச்சந்திப்பின் நோக்கம் அடுத்த ஜெனிவா கூட்டத் தொடரை தமிழ்த் தரப்பு எப்படி ஒரே அணி-யாக அணுகலாம் என்பதற்குரிய வழிவகைகளை கண்டுபிடிப்பதே. திரு-மலை கத்தோலிக்க மறை மாவட்டத்தின் ஆயரான நோயல் இமானுவேல்மத குருக்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் அமைப்புக்களின் பிரதிநிதிகள் இவர்களோடு தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். அச்சந்திப்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியை சேர்ந்தவர்கள் பங்கு பற்றவில்லை. எனினும் அடுத்தகட்ட சந்திப்பில் அவர்களையும் இணைத்துக் கொள்வது என்றும் அவர்களுடைய கருத்துக்களையும் கேட்ட பின்னரே ஜெனிவாவைக் கையாளுவதற்கான ஒரு பொதுக் கட்டமைப்பை இறுதியாக்குவது என்றும் முடிவெடுக்கப்பட்டது.இதன்படி ஒரு உபகுழுவும் உருவாக்கப்பட்டது.

இம்முயற்சிகளின் விளைவு என்னவாகவும் இருக்கலாம். ஆனால் தமிழ்க் கட்சிகளின் மீது குடிமக்கள் சமூகத்தில் செல்வாக்கு எனப்படுவது அது எந்த வடிவத்தில் வந்தாலும் வரவேற்கப்பட வேண்டும். தமிழ்க் கட்சிகளை ஒருங்கிணைக்கும் பணி-யில் அல்லது தமிழ் கட்சிகளுக்கிடையில் ஒரு பொதுக்கருத்தை ஏற்படுத்தும் பணியில் குடிமக்கள் சமூகங்கள் ஏற்கெனவே ஈடுபட்டிருக்கின்றன. குறிப்பாக 2009க்கு பின் கூட்டுத் தோல்வியினாலும் கூட்டு அவமானத்தாலும் கூட்டுக் காயங்களினாலும் கூட்டு மனவடுக்களினாலும் கூட்டுப் பயத்தினாலும் முடங்கிப் போயிருந்த ஒரு சமூகத்தில் துணிச்சலாக சன்னமாக ஒலித்த ஒரே குரல் முன்னாள் மன்னார் மறைமாவட்ட ஆயரான ராயப்பு ஜோசெப்பின் அடிக-ளுடையதுதான்.

ஒரு ஆயுதப் போராட்டம் கொடுமையான விதங்களில் தோற்கடிக்கப்பட்ட பின்னரான ஒரு அச்சச்சூழலில் குரலற்ற தமிழ் மக்களின் குரல-ாக ஆயர் ராயப்பு ஜோசப் அடிகளார் ஒலித்தார். தமிழ்க் குடிமக்கள் அமையத்தின் இணைத் தலைவராக அவர் இருந்தார். அவருடைய தலை-லமையில் தமிழ் சிவில் சமூக அமையம் மன்னாரில் 2013ஆம் ஆண்டு ஒரு சந்திப்பை ஒழுங்குபடுத்தியிருந்தது. அச்சந்திப்பில் தமிழ்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளின் தலைவர்களும் குடிமக்கள் சமூகத்தின் பிர-திநிதிகளும் மதகுருக்களும் கலந்து கொண்டார்கள். அச்சந்திப்பில்தான் ஒரு முக்கிய முடிவு எடுக்கப்பட்டது. தமிழ்த் தேசிய பேரவை ஒன்றை உருவாக்குவது என்று.

அப்படி ஒரு பேரவை இன்று வரையிலும் உருவாக்கப்படவில்லை. ஆயர் ராயப்பு நோய்வாய்ப்பட்டு ஓய்வுபெற்றுவிட்டார். சில ஆண்டுகளின் பின் மன்னாரை மையமாகக் கொண்டியங்கும் குடிமக்கள் அமைப்பின் தலை-லவரான சிவகரன் "தடம் மா-றுகிறதா தமிழ் தேசியம்?" என்ற பெயரில் கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்தினார். அவரைப் போலவே வேறு அமைப்புகளும் கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்தின. அக்கருத்தரங்குகள் யாவும் அப்போது தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக இருந்த கூட்டமைப்பின் மீது விமர்சனங்களை முன்வைத்து கூட்டமைப்பை சரியான தடத்தில் ஏற்றும் நோக்கத்தைக் கொண்டவைகளாக அமைந்திருந்தன. ஆனால் அது சரி வரவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில்தான் 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. இந்த ஆட்சி மாற்றத்தின் பின் ஒப்பீட்டளவில் அதிகரித்த ஜனந-ாயக வெளிக்குள் தமிழ் மக்கள் பேரவை என்ற ஓரமைப்பு உருவாக்கப்பட்டது. சில ஆண்டுகளுக்கு முன் முன்னாள் மன்னார் ஆயரின் தலைமையில் கூடி முடிவெடுக்கப்பட்ட ஒரு தமிழ்த் தேசியப் பேரவை அது அல்ல. இது தமிழ்

**(தொடர்ச்சி 6ம் பக்கம்)**





## இடையூறு இல்லாத ஆனந்தம்.
## அதி-வேக விமான பயணங்கள்.

*கொழும்பு மற்றும் இதர பிற பயண இலக்குகளுக்கு சுலபமான இணைப்புகள்†*

மத்திய கிழக்கு, இந்திய துணைக்கண்டம் மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு சுலபமான பயண இணைப்புகளுக்கு வசதி செய்துகொடுக்கும் எங்கள் டோரொன்டொ -தோஹா அதிவேக விமானப் பயணங்கள் நீங்கள் உங்கள் அன்புக்குரியவர்களுடன் மீண்டும் சேர்ந்திருக்க வழி அமைத்துக் கொடுக்கும்†.

நீங்கள் தோஹா செல்லும் வழியில், விருது பெற்றுத் தந்த சேவைகளை அனுபவித்து மகிழுங்கள், **Boeing 787 Dreamliner** விமானத்தில் மூன்று வகை சேவைகளிலிருந்து ஒன்றைத் தேர்ந்தெடுத்து சௌகரியத்தின் உச்சத்தில் திளைத்திருங்கள், அதில் **Air Canada Signature Class** கிடைநிலை-தட்டை இருக்கைகள், இடம் அதிகமிருக்கும் பிரீமியம் எகானமி வகுப்பு மற்றும் வசதியான எகானமி வகுப்பும் அடங்கும்.

மாற்றும் கட்டணம் இல்லாத* விரிவான புக்கிங் ஆப்ஷன்கள், நெகிழ்வு மற்றும் துறையில் முன்னணி இடத்திலிருக்கும் **Air Canada CleanCare+** புரொக்ராம், உங்கள் பயணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் தொடுவதற்கு அவசியமில்லாத பையோசேஃப்டி நடவடிக்கைகள் பின்பற்றப்படும் அதிகரித்த பாதுகாப்பு ஆகிய வசதிகளுடன் உங்கள் அடுத்த பயணத்தை இப்பொழுது திட்டமிடுங்கள்.

**aircanada.com**-ல் இப்பொழுதே புக் செய்யுங்கள் அல்லது உங்கள் டிராவல் ஏஜென்டுடன் தொடர்பு கொள்ளுங்கள்

Voted Best Airline in North America

A STAR ALLIANCE MEMBER | AIR CANADA

†Connection flights beyond Doha operated by Qatar Airways.
*You can make a one-time change without a fee for all new or existing bookings made through February 28, 2021, for original travel between March 1, 2020, and February 28, 2022.

இலங்கை செய்திகள்

# மன்னாரில் மண் அகழ்விற்கு அனுமதி இல்லை - சூழல் அமைப்பின் கலந்துரையாடலில் தீர்மானம்



மன்னார் மாவட்டத்தில் அவுஸ்ரேலிய நிறுவனம் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட கனிய மண் ஆய்வு மற்றும் மன்னார் மாவட்டத்தில் குறித்த நிறுவனம் மேற்கொள்ள உள்ள கனிய மண் அகழ்வு தொடர்பாகவும் மண் மற்றும் கனிய வள சுரண்டல்களை சட்ட ரீதியாக அனுகுவது தொடர்பான கலந்துரையாடல் மன்னார் சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைப்பின் ஏற்பாட்டில் மன்னார் பிரஜைகள் குழுவின் அனுசரணையில் சுற்றாடல் நீதிக்கான கேந்திர நிலையத்தினால் நேற்று முன்தினம் புதன் கிழமை காலை மன்னார் கறிற்றாஸ் வாழ்வுத கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.



குறித்த கூட்டத்திலே மன்னார் மாவட்ட எல்லை பகுதியில் அரச அனுமதியுடனோ அல்லது அரச அனுமதி இன்றியோ சட்ட ரீதியாகவோ சட்ட முரணாகவோ மண் அகழ்வு மேற்கொள்ள அனுமதிக்க போவதில்லை என தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டின் வளங்கள் பயன்பாடு தொடர்பாக நாடளாவிய ரீதியில் காணப்படும் சட்டங்கள் தொடர்பாகவும் அவற்றை பாதுகாப்பதற்காக நீதி மன்றங்களை பயன் படுத்துவதற்கு ஏதுவான காரணங்கள் தொடர்பாகவும் சுற்றாடல் நீதிக்கான அமைப்பின் விரைவுரையாளர்களால் புதன்கிழமை (30) மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் பின்னரே மேற்படி தீர்மானிக்கப்பட்டது.

அதே நேரத்தில் மன்னார் மாவட்டத்தில் கடந்த வருடங்களில் அவுஸ்திரேலிய நிறுவனத்தினால் இடம் பெற்றுள்ள கனிய வள ஆய்வு செயற்பாடு தொடர்பாகவும் அவற்றை கையாள்வதற்கான அனுகு முறைகள் தொடர்பாக கனிய அகழ்வை தடுப்பதற்கான பல்வேறு தெளிவு படுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் உறுப்பினர்கள், சமூக ஆர்வளர்கள் சூழலியளாலர்கள், பிரஜைகள் குழு உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# நாங்கள் தொலைத்தது விலை மதிக்க முடியாத எமது உறவுகளை

## மன்னாரில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டம்

நாங்கள் தொலைத்தது விலை மதிக்க முடியாத எமது உறவுகளை. அவர்களை தொலைத்து விட்டு இன்று அவர்களை நாங்கள் தேடிக் கொண்டு வீதிகளில் நிற்கின்றோம். எனவே சர்வதேச விசாரனை வேண்டும் என்றே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாங்கள் கேட்கின்றோம் என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்க இணைப்பாளர் மனுவல் உதையச்சந்திரா தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கம் நேற்று முன் தினம் புதன் கிழமை 30ம் திகதி காலை 10.30 மணியளவில் மன்னார் நகர பேருந்து தரிப்பிடத்திற்கு முன் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.



காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை கண்டு பிடித்து தரக்கோரியும், காணாமல் ஆக்கப்பட்டோர் விடையத்தில் சர்வதேச விசாரனை மேற்கொள்ள வேண்டும் என கோரியும் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்க இணைப்பாளர் மனுவல் உதையச்சந்திரா..... நாங்கள் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை கண்டு பிடிக்கக்கோரி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம்.

தொடர்ந்தும், ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். ஆனால் ஒரு தீர்வுமே எமக்கு கிடைக்கவில்லை. தீர்வு கிடைக்கவில்லை என்பதற்காக எமது போராட்டங்களை நாங்கள் கைவிட்டு இருக்கப்போவதும் இல்லை.

நாங்கள் தொலைத்தது விலை மதிக்க முடியாத எமது உறவுகளை. அவர்களை தொலைத்து விட்டு இன்று அவர்களை நாங்கள் தேடிக் கொண்டு வீதிகளில் நிற்கின்றோம்.




சர்வதேச விசாரனை வேண்டும் என்றே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாங்கள் கேட்கின்றோம். எதிர் வரும் வருடம் 2 ஆம் மாதம் ஜெனிவா பேச்சுவாத்தை இடம் பெற உள்ளது.

அதன் போது கால அவசாசம் வழங்கப்பட உள்ளதாக தெரிய வருகின்றது. இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசம் வழங்கக்கூடாது. மூன்று தடவைகள் கால அவகாசம் வழங்கியும் எந்த ஒரு பலனும் கிடைக்கவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகத்தை கொண்டு வந்தனர். ஆனால் ஒன்றுமே நடைபெற இல்லை. எங்களை ஏமாற்ற அரசாங்கள் இவ்வாறு நடந்து கொள்ளுகின்றது.அதனை எமது அரசியல் வாதிகள் நம்ப வேண்டும்.

உங்களை நம்பியே நாங்கள் வாக்களித்தோம்.உங்களை நம்பியே நாங்கள் போராட்டங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் முன்னெடுக்கின்றோம். எத்தனை வாக்குகளினால் வெற்றி பெற்றிர்கள், எத்தனை வாக்கனினால் தோல்வி அடைந்துள்ளீர்கள் என்பது உங்களுக்கு தெரியும்.

ஆனால் எத்தனை உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள் என்று உங்களுக்கு தெரியாது.அதனை பற்றி யோசிப்பதற்கு உங்களுக்கு நேரம் இல்லை.

நாங்கள் வீதிகளில் நின்று போராடுகின்ற போதும் அரசியல் வாதிகள் யாரும் எங்களிடம் வந்து எதுவும் கேட்பது இல்லை. இனியாவது கேட்பீர்களா? என்று தெரியாது.

தொடர்ந்தும் ஒவ்வொரு மாதமும் 30ஆம் திகதி போராட்டத்தை முன்னெடுப்போம். உங்களினால் முடிந்தால் எமது போராட்டத்தில் கலந்து கொண்டு எமது உறவுகளை கண்டு பிடிக்க குரல் கொடுக்குமாறு கேட்டு நிற்கின்றோம். என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பல்வேறு பதாதைகளை ஏந்தியவாறு முகக்கவசம் அணிந்து சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக குறித்த போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழ் மாநகரசபையில் பெரும்பான்மை அங்கத்தவர்களைக் கொண்டிருந்தும் மேயர் பதவியை கைநழுவ விட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு

யாழ்ப்பாணம் மாநகர சபையில் பெரும்பான்மையான அங்கத்தவர்களைக் கொண்டிருந்தும் இன்று புதன்கிழமை காலை நடைபெற்ற மேயர் தெரிவுக்கான போட்டியில் தமிழ்க் காங்கிரஸ் கட்சியிடம் மேயர் பதவியை கைநழுவ விட்ட சம்பவம் யாழ்ப்பாண மாநகரசபை வரலாற்றில் மட்டுமல்ல, யாழ்ப்பாணத் தமிழர் அரசியல் வரவாற்றில் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டுவிட்டதாகவே கருதப்படுகின்றது.



இன்று நடைபெற்ற மேயர் தேர்தலில் ஈபிடிபி கட்சியின் ஆதரவை எதிர்பாராத விதமாகப் பெற்ற சட்டத்தரணி வி. மணிவண்ணன் யாழ்ப்பாண மாநகரசபையின் புதிய மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஏற்கெனவே தோல்வியடைந்த முன்னாள் மேயர் இ. ஆனோல்ட் அவர்களை போட்டியில் நிறுத்த வேண்டாம் என்று பல தரப்பிலும் எச்சரிக்கை செய்தும் அதை செவிமடுக்காமல் மாவை சேனாதிராஜாவின் முட்டாள்த்தனமான முடிவே இந்த தோல்வியை தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு கொண்டு வந்துள்ளதாக அரசியல் ஆர்வலர்கள் யாழ்ப்பாணத்தில் இன்னு கருத்துக்களைப் பகிர்ந்துள்ளனர். வி. மணிவண்ணன் வெற்றிபெற்றுள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் இன்று புதன்கிழமை காலை வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில் முதல்வர் தெரிவுக்கான போட்டியில் இ.ஆனோல்ட்டுடன் வி.மணிவண்ணனும் போட்டியிட்டார்..

இந்நிலையில் இன்று பதன் இடம்டபெற்ற வாக்கெடுப்பில் மணிவண்ணனுக்கு 21 வாக்குகளும், இ.ஆனோல்ட்டுக்கு 20 வாக்குகளும் கிடைத்திருந்தன.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாநகர சபையின் 23ஆவது முதல்வராக சட்டத்தரணி வி.மணிவண்ணன் பதவியேற்றுள்ளார்.

யாழ்.மாநகர சபையில் இன்று (புதன்கிழமை) இடம்பெற்ற வாக்களிப்பில் மாநகர சபையில் அங்கம் வகிக்கும் 45 உறுப்பினர்களில் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் மகாலிங்கம் அருள்குமரன் மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரசின் 3 உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர்.

ஏனைய 41 உறுப்பினர்களில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் 10 உறுப்பினர்களும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் 10 உறுப்பினர்கள் உட்பட 21 உறுப்பினர்கள் வி.மணிவண்ணனுக்கு ஆதரவு வழங்கினார்கள்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் 14 உறுப்பினர்களும் தமிழர் விடுதலை கூட்டணியின் ஒரு உறுப்பினரும் உள்ளடங்கலாக 20 உறுப்பினர்கள் இம்மானுவேல் ஆர்னோல்ட்க்கு ஆதரவு வழங்கினார்கள்.

இவ்வாறாக ஒரு வாக்கு வித்தியாசத்தில் சடடத்தரணி வி.மணிவண்ணன் யாழ்.மாநகர சபையின் முதல்வராக தெரிவாகியுள்ள விடயம் யாழ்ப்பாணத்தை மட்டுமல்ல, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கொழும்பு அங்கத்தவர்கள் மத்தியிலும் மிகுந்த அவமானத்தை ஏற்படுத்தியுள்ளதாக கொழும்பிலிருந்து கிடைத்த செய்தி தெரிவிக்கின்றது. இந்த "தோல்வி"க்காக மாவை சேனாதிராஜாவை எம்பி சுமந்திரன் கடுமையாக விமர்சனம் செய்துள்ளதாகவும் அறியப்படுகின்றது.

# ஜெனிவாவை நோக்கித் தமிழ்த் தரப்பு ஒன்றுபடுமா?

(4ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் பேரவை என்ற பெயரில் உருவாகியது.

முன்னாள் மன்னார் ஆயரின் சந்திப்பை ஒழுங்கு படுத்திய தமிழ் சிவில் சமூக அமையத்தைச் சேர்ந்தவர்களே இந்தப் பேரவைக்குள்ளும் குறிப்பிடத்தக்க அளவுக்கு பொறுப்புகளை வகித்தார்கள்.

தமிழ் மக்கள் பேரவையின் எழுச்சியும் விக்னேஸ்வரனின் எழுச்சியும் வலம்புரி பத்திரிகையின் எழுச்சியும் ஏறக்குறைய சமாந்தரமானவை. ஒரு முதலமைச்சராக விக்னேஸ்வரன் தனது கட்சித் தலைமைக்கு எதிராக திரும்பிய ஒரு பின்னணியில் அவரையும் அரவணைத்துக் கொண்டு தமிழ் தேசிய மக்கள் முன்னணி;ஈபிஆர்எல்எப்புளொட் ஆகிய கட்சிகளை ஒருங்கிணைத்து தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டது. தமிழ்த் தேசி-ய அரசியலில் அது ஒரு புதிய நொதிப்பை ஏற்படுத்தியது. தொடர்ச்சியாக சந்திப்புகள்கருத்தரங்குகள் ஆர்ப்பாட்டங்கள் எழுக தமிழ்கள் என்று தமிழ்மக்கள் பேரவை ஒரு கட்டம் வரையிலும் வளர்ச்சி பெற்றது. எனினும் அது ஒரு மக்கள் மயப்பட்ட அமைப்பாக இருக்கவில்லை. விக்னேஸ்வரன் போன்ற பிரமுகர்களை மையமாகக் கொண்டே அது கட்டமைக்கப்பட்டது. எனவே மேலிருந்து கீழ் நோக்கி கட்டமைக்கப்பட்டது. கீழிருந்து மேல் நோக்கி கட்டமைக்கப்படவில்லை. அதனால் ஒரு கட்டத்துக்கு மேல் அந்த அமைப்பு நின்றுபிடிக்க முடியவில்லை. இப்பொழுது அது அனேகமாகச் சோர்ந்து விட்டது. அதை அடுத்த கட்டத்துக்குப் புதுப்பிக்க வேண்டும்.

அச்சோர்வுக்குக் மற்றொரு காரணம் அந்த அமைப்புக்குள் அங்கம் வகித்த விக்னேஸ்வரனும் உட்பட அரசியல் கட்சிகளே. இக்கட்சிகள் தங்களுக்கிடையே ஒரு பலமான ஐக்கியத்தை ஏற்படுத்தி ஒரு பலமான மாற்று அணியாக எழுந்திருந்தால் தமிழ் அரசியலில் இப்போது இருப்பதை விட அதிகரித்தளவில் ஒரு புதிய இரத்தச் சுற்றோட்டத்தை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால் பேரவையில் அங்கம் வகித்த கட்சிகளும் விக்னேஸ்வரனும் ஒன்றாக இணைய முடியவில்லை. அவை தங்களுக்கிடையே மோதிக்கொண்டன. அந்த மோதலைக் கட்டுப்படுத்தும் சக்தி பேரவைக்கு இருக்கவில்லை. அதன் விளைவாக அந்த மூன்று கட்சிகளும் சிதறிப்போயின. பேரவையும் சோர்ந்து போய்விட்டது. எனினும் 2015க்கு பின்னரான ஒப்பீட்டளவில் அதிகரித்த ஜனநாயக வெளிக்குள் நெருப்பை அணைக்க படாமல் பாதுகாத்தது பேரவையும்தான்.


2013ஆம் ஆண்டு முன்னாள் மன்னார் ஆயர் தலைமையில் முடிவெடுக்கப்பட்டது போல ஒரு தமிழ்த் தேசியப் பேரவையை உருவாக்க முடியவில்லை. எனினும் குறைந்தபட்சம் ஒரு தமிழ்மக்கள் பேரவையை உருவாக்க முடிந்தது. ஆயர் ராயப்பு அடிகளார் ஓய்வு பெற்ற பின் புதிய குடிமக்கள் சமூகங்களைச் சேர்ந்த புதிய தலைவர்கள் எழுச்சி பெற்றார்கள். எனினும் ஒரு கட்டத்துக்கு மேல் அவர்களால் தொடர்ந்து ஓட முடியவில்லை. கடந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலின்போது மற்றொரு முயற்சி எடுக்கப்பட்டது. தமிழ் மக்கள் பேரவையால் ஜனாதிபதி தேர்தலுக்கான தமிழ் சுயாதீனக் குழு ஒன்று உருவாக்கப்பட்டது. அது தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான ஒரு பொதுக்கருத்தை உருவாக்க முயற்சித்தது. எனினும் அது வெற்றியளிக்கவில்லை. ஆனால் அந்த முயற்சி பரவலாக கவனிப்பைப் பெற்றது. அதனிடையே யாழ் பல்கலைக்கழக மாணவர்களும் ஒரு ஒருங்கிணைப்பு முயற்சியை முன்னெடுத்தார்கள். அதன் விளைவாக 13 அம்சக் கோரிக்கைகள் அடங்கிய ஓர் ஆவணம் தயாரிக்கப்பட்டது. ஆனால் அதில் கையெழுத்திட்ட கட்சிகளே அந்த ஆவணத்தைப் பின்னர் கைவிட்டனர். அனுபவசாலிகளும் தந்திரசாலிகளும் நிலையான நலன்களின் அடிப்படையில் சிந்திப்பவர்களுமாகிய தமிழ்க் கட்சித் தலைவர்களை ஒன்றாக ஒரு மேசையில் வைத்து அனுசரணை புரியத் தேவையான முதிர்ச்சியும் கொள்ளளவும் மாணவர்களுக்கு இருக்கவில்லை. அதனால் அந்த 13அம்சக் கோரிக்கைகள் பின்னர் கைவிடப்பட்டன. எனினும் அது ஒரு குடிமக்கள் சமூகம் அல்லது மாணவர் அமைப்பு தமிழ் அரசியலின் மீது எவ்வளவு தூரம் செல்வாக்கைப் பிரயோகிக்க முடியும் என்பதற்கு அது ஒரு சிறப்பான பரிசோதனையாகும்.

இவ்வாறு 2009க்கு பின்னிருந்து தமிழ் சிவில் சமூக அமையத்திலிருந்து தொடங்கி தமிழ் மக்கள் பேரவை வரையிலுமான கட்டமைப்புக்களின் மூலம் சிறிய அளவிலோ பெரிய அளவிலோ தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு நொதிப்பு ஏற்பட்டது. இந்த நொதிப்பின் விளைவாகத்தான் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிப்புக் கோலம் மாறியது. இப்பொழுது கூட்டமைப்பு அதன் ஏகபோகத்தை இழந்து விட்டது. மாற்று அணியை சேர்ந்த 3 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வந்துவிட்டார்கள். இது ஒரு மாற்றம்.

மாற்று அணியை சேர்ந்தவர்கள் இந்த இடத்தில் ஒரு விடயத்தை மனதில் வைத்திருக்க வேண்டும்.மாற்று அணிக்குக் கிடைத்த வாக்குகள் எனப்படுவது தனிய அந்தக் கட்சிகளின் கடும் உழைப்பால் மட்டும் கிடைத்தவை அல்ல. அதற்குமப்பால் அது கடந்த பத்தாண்டுகளில் குடிமக்கள் சமூகங்கள் ஏற்படுத்திய நொதிப்பின் விளைவும்தான். கூட்டமைப்பு விட்ட தவறுகளின் விளைவும்தான். எனவே கடந்த பத்தாண்டுகளில் தமிழ் தேசிய அரசியலில் ஏதோ சிறு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்றால் அதில் குடி மக்கள் சமூகங்கள் ஏதோ ஒரு விகிதமளவுக்கு பங்களித்திருக்கின்றன. அந்தப் பங்களிப்பின் விகி-தம் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு தமிழ் அரசியலும் செழிப்படையும். இதில் கடந்த 10ஆண்டுகால அனுபவத்தையும் தொகுத்துக் கற்க வேண்டும். ஆயுத மோதல்கள் முடிந்த கையோடு முதலில் தமிழ் சிவில் சமூக அமையம் பின் தமிழ் மக்கள் பேரவை போன்ற அமைப்புகள் எந்த அளவுக்கு தமிழ் அரசியலின் மீது தாக்கமான செல்வாக்கைச் செலுத்தின என்று பார்க்கவேண்டும். இதுவிடயத்தில் குடிமக்கள் சமூகங்கள் ஏன் ஒரு கட்டத்துக்கு மேல் தமிழ்க் கட்சிகளின் மீது செல்வாக்கைப் பிரயோகிக்க முடியவில்லை என்பதையும் கற்றுக் கொள்ள வேண்டும். குறிப்பாக கடந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலின்போது யாழ். பல்கலைக்கழகம் முன்னெடுத்த ஒருங்கிணைப்பு முயற்சிகள் ஏன் தோல்வியுற்றன என்பதிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். தமிழ்க் கட்சித் தலைவர்களை ஒரே மேசையில் கொண்டு வந்து இருத்துவதற்கு வெறுமனே நீதியின் பாற்பட்ட அறம்சார்ந்த நன்நோக்கம் கொண்ட சில அனுசரணையாளர்களால் மட்டும் முடியாது என்பதைத்தான் கடந்த 10 ஆண்டுகால அனுபவம் நிரூபித்திருக்கிறது. குடிமக்கள் சமூகங்கள் தங்களை கீழிருந்து மேல் நோக்கி மேலும் பலமாகக் கட்டியெழுப்பும் பொழுதே அரசியல்வாதிகள் குடிமக்கள் சமூகங்களின் அழுத்தத்தை மீறிச்செல்ல முடியாத ஒரு வளர்ச்சி ஏற்படும்.

இப்படிப்பட்டதொரு பின்னணியில்தான் இப்பொழுது தமிழ்க் கட்சிகளை ஜெனிவாவை நோக்கி ஒருங்கிணைக்கும் ஒரு வேலை தொடங்கப்பட்டிருக்கிறது. இதில் வெற்றி கிடைக்கலாம் கிடைக்காமல் போகலாம். ஆனால் தமிழ்க் கட்சி அரசியலின் மீது குடிமக்கள் சமூகங்கள் செல்வாக்குச் செலுத்தும் ஒரு வளர்ச்சி என்பது தமிழ் அரசியலை குறிப்பாக தமிழ்த் தேசியத்தின் ஜனநாயக இதயத்தை மேலும் செழிப்பாக்க அவசியம்.

# யாழ்ப்பாண மாநகரசபையை கைநழுவவிட்டது தொடர்பாக மாவை சேனாதிராஜாவை கண்டிக்கும் சுமந்திரன்



நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ்ப்பாண மாநகரசபையின் மேயர் பதவிக்கான தெரிவிக் கூட்டத்தில், மேற்படி பதவியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைநழுவவிட்டது தொடர்பாக மாவை சேனாதிராஜாவை குற்றச்சாட்டியும் கண்டித்தும் கடிதமொன்றை எழுதியுள்ளார் எம். ஏ. சுமந்திரன்
மேற்படி கடிதத்தின் பிரதி தமிழ் ஊடகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.
ஆதில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது

திரு மாவை சேனாதிராஜா
தலைவர், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு
தலைமைப் பீடம்

இன்று யாழ் மாநகர சபை மேயர் தேர்வில் தமிழ் தேசிய கூட்டமைப்பு தோல்வியடைந்துள்ளது.

வரவு-செலவு திட்ட முன்மொழிவில் இரண்டு தடவைகள் தோல்வியுற்ற காரணத்தால் எமது மேயர் பதவி இழந்ததை அடுத்து நடந்த நிகழ்வுகளை இங்கே வரிசைப்படுத்த விரும்புகிறேன்:

19.'.12.'.20 அன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயாவின் இல்லத்தில் சந்தித்ததை அடுத்து, வீட்டுவாசலில் வைத்து யாழ்மாநகரசபைக்கு புதிய மேயர் வேட்பாளராக வேறொருவரை நியமிப்பதே உசிதம் என்றும் அதற்குப் பொருத்தமானவர் முன்னால் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சொலமன் சிறில் என்பது என்னுடைய கருத்து என்பதையும் கூறினேன்.

21.'.12.'.20 அன்று நீங்கள் எனக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்து, நான் சொன்ன கருத்தோடு நீங்கள்உடன்படுவதாகவும் இது சம்பந்தமாக பாராளுமன்ற உறுப்பினர் திரு. சிவஞானம் சிறிதரனின்கருத்தும் திரு. சொலமன் சிறில் என்பதே என்றும் சொன்னீர்கள். நீங்கள் யாழ்ப்பாணம் செல்வதாகவும் அங்கே உறுப்பினர்களோடு நடாத்தும் கூட்டத்திற்கு என்னை வரமுடியுமாஎன்றும் கேட்டீர்கள். கட்சியின் அரசியல் அமைப்பு யோசனைகள் நிறைவு செய்யும் வரை என்னால் வரமு-டியாது என்றும் திருசொலமன் சிறில் வேட்பாளராக வருவதில் எனக்கு உடன்பாடு உள்ளது என்றும் கூறினேன். எப்படியாயினும் இறுதிமுடிவு எடுப்பதற்கு முன்பதாக என்னோடு திரும்பவும் பேசுவதாக கூறியிருந்தீர்கள்.

எட்டு நாட்களுக்குப்பிறகு நேற்றைய தினம் 29.'.12.'.2020 காலையில் நீங்கள் எனக்குத்தொலைபேசிஅழைப்பெடுத்து மாநகரசபை உறுப்பினர்களில் அநேகமானவர்கள் திரு ஆர்னோல்டையே திரும்பவும்வேட்பாளராக நிறுத்தவேண்டும் என்று விரும்புவதாகவும், இறுதித்தீர்மானம் எடுப்பதற்காக காலை 10.30 மணிக்கு கூட்டம் ஒன்று நடத்தப்போவதாகவும் சொன்னீர்கள்.

நான் கொழும்பில் இருந்து பிரயாணமாகி வந்துகொண்டிருக்கின்றேன் என்றும் மதியம் 1 மணிக்குப்பின்னரே யாழ்ப்பாணத்திற்கு வந்தடைவேன் என்றும் அதற்குப்பின்னர் கூட்டத்தை நடாத்தினால் நான் கலந்து கொள்வேன் என்றும் உங்களுக்கு நான் அறியத்தந்தேன்.

அதே தொலைபேசி உரையாடலில், புதிய மேயர் வேட்பாளர் சம்பந்தமாக எனது நிலைப்பாட்டைத் தெளிவாக திரும்பவும் கூறினேன்:

வரவு செலவுத்திட்டம் தோல்வியுற்றால் இராஜிணாமா செய்ய வேண்டியது ஒரு ஜனநாயக விழுமியம் மட்டும்அல்ல, அது ஒரு ஜனநாயக மரபாகவும் இருந்திருக்கின்றது. இந்த மரபு பின்பற்றப்படாத காரணத்தால்தான் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டு □இராஜிணாமா செய்தவராக கருத வேண்டும்□ என்று அது ஒருசட்டத்தின் தேவைப்பாடாகவும் ஏற்படுத்தப்பட்டது.

சட்டத்தின் செயற்பாட்டினால் இராஜினாமா செய்தவர் ஆனவர் மீண்டும் அப்பதவிக்குப்போட்டியிடுவது சட்டத்திற்கு முரணானது மட்டும் அல்லாமல் ஜனநா-யக விழுமியங்களையும் மீறுகின்ற செயலாகும்.

ஆகையால் இராஜினாமா செய்தவரான ஆர்னோல்ட்டைத்தவிர வேறொருவரைத்தான் எமது வேட்பாளராகதெரிவு செய்ய வேண்டும் என்பதை திட்டவட்டமாக சொன்னேன். வரவுசெலவுத்திட்டத்தின் தோல்வியின் காரணமாக இராஜினாமா செய்தவர்களை மீளவும் வேட்பாளர்களாக நிறுத்தினால் தமது கட்சி அதை எதிர்க்கும் என்றும், அப்படி அல்லாது வேறு எவரையேனும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு நிறுத்தினால், தாம் ஆரதவு கொடுப்போம் என்றும் சில நாட்களுக்கு முன்னர்தமிழ்த்தேசிய மக்கள் முண்ணனித்தலைவர் திரு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பகிரங்கமாக அறிவித்திருந்தார். இவ் அறிவிப்பு எமது கட்சி வேட்பாளரை வேறு கட்சியினர் தெரிவு செய்யும் செயற்பாடு அல்ல. நான் மேற்சொன்ன ஜனநாயக விழுமியத்தின் அடிப்படையிலான அறிவிப்பே அது.

இலங்கைத்தமிழரசுக்கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரினதும் கருத்துக்கு மாறாகவும், நீங்கள் எனக்குச்சொன்ன தங்களது சொந்தக்கருத்துக்கே மாறாகவும், தன்னிச்சையாக நேற்று காலை 10.30 மணிக்கு இலங்கைத்தமிழரசுக்கட்சிக்கு ஒதுக்கப்பட்ட யாழ் மாநகர சபை மேயர் பதவிக்கு, ஏற்கனவே இராஜனாமா செய்தவரான திரு ஆர்னோல்ட்டையே வேட்பாளராக அறிவித்திருந்தீர்கள்.

உங்களுடைய மேற்சொன்ன, தன்னிச்சையான, ஜனநாயக விரோத, சட்டவிரோத செயற்பாட்டினால் போட்டியின்றி வென்றிருக்க வேண்டிய யாழ் மாநகர சபை முதல்வர் பதவியை நாம் இழந்திருக்கின்றோம்.

தமிழ்த்தேசிய அரசியல் களத்தில் மிக முக்கிய அடையாளமான யாழ் மாநகர சபை தலைமையை எமது கட்சி இழந்தமைக்கு மேற்சொல்லப்பட்ட தங்களது நடவடிக்கைகளே காரணமாகும் என்பதையும், இதனால் ஏற்படும் கட்சியின் பின்னடைவுக்கும் தாங்களே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்பதையும் இத்தால் பதிவு செய்கின்றேன்.

இப்படிக்கு,

M.A.சுமந்திரன் பா. உ.
யாழ் மாவட்டம்

# பத்து ஆண்டுகளை நிறைவு செய்துள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்!

2009 மே, ஈழத்தமிழர் தேசம் பெரும் இனவழிப்பொன்றின் ஊடாக சிங்கள அரச கட்டமைப்பினால் ஆக்கிமிக்கப்பட்டுள்ள நிலையில், தாயகம், தேசியம், அரசியல் இறையாண்மை எனும் ஈழத்தமிழர் தேசத்தின் அரசியல் பெருவிருப்பின் ஜனநாயக வடிவமாக திகளுகின்ற நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், தனது பத்தாவது ஆண்டினை நிறைவு செய்துள்ளது.

இப்பத்தாண்டுகளில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கடந்தது வந்த செயல்வழிப்பாதை தொடர்பில் பிரதமர் வி.உருத்திரகுமாரன் அவர்கள் தொடர்பில் அரசவை அமர்வின் போது ஆற்றிய உரையின் முக்கிய குறிப்புகள்:

நாடுகடந்த அரசாங்கம் உருவாக்கப்பட்டு இவ் வருடம் மே மாதத்துடன் பத்தாண்டுகள் நிறைவு பெற்றன. இப் பத்தாண்டுகளிலும் நாம் ஜனநாயகத் தேர்தல்முறையின் ஊடாகத் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பாக, ஜனநாயக விழுமியங்களுக்கு உட்பட்டுச் செயற்படும் அமைப்பாக தொடர்ச்சியாக இயங்கி வருகிறோம்.

அரசற்ற ஒரு தேசத்துக்கான அரசினை உருவாக்குவதனை இலக்காகக் கொண்டு உலகளாவிய ரீதியில் நாடுகளின் எல்லைகளைக் கடந்த ஒரு உயர்ந்த பார்வையுடன் செயற்படும் அமைப்புகள் இவ்வுலகில் உண்டென்றால் அவை எல்லாவற்றுக்கும் ஒரு முன்னுதாரணமாகவும் நாம் செயற்பட்டு வருகிறோம் என்பது இவ்விடத்தில் குறித்துக் கொள்ளப்பட வேண்டியது.

2009ம் ஆண்டு மே மாதத்தில் பெரும் தமிழன அழிப்புக்கூடாக ஈழத் தமிழர் தேசத்தை சிங்கள பௌத்த பேரினவாதப்பூதம் முழுமையாக ஆக்கிரமித்தபோது தமிழர் தேசத்தின் சுதந்திரவேட்கையினை முழுமையாக நசுக்கி விடலாம் என்றே நம்பியது.

சிங்களத்தின் எதிர்பார்ப்பை முறியடித்து தமிழர் தேசத்தினது சுதந்திர வேட்கையின் குறியீடாக நாம் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தை உருவாக்கி 2010 ஆண்டு மே மாத முள்ளிவாய்க்கால் முதல் ஆண்டு நினைவுடன் உலகுக்கு அறிமுகம் செய்தோம்.

கடந்த 10 வருடங்களாக அரசியல், இராஜதந்திர வழிகளில் ஈழத் தமிழர் தேசத்தின் இறைமையினை மீட்டெடுப்பதற்கான போராட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறோம். தமிழ் மக்கள் தமக்கென சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழ அரசினை உருவாக்கும் மாவீரர்களது விடுதலைக்கனவை தமது உள்ளங்களில் சுமந்து கொண்டிருக்கிறார்கள் என்பதன் சாட்சியாக நமது செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன.

நமது செயற்பாடுகளை நாம் பல்வேறு அரசியற் களங்களில் மேற்கொண்டு வருகிறோம். நீதி மன்றங்களையும் அரசியற்களங்களாகப் பயன்படுத்தும் அணுகுமுறையினையும் முன்னெடுத்து செயற்பட்டு வருகிறோம். இவ்வகையான எமது தொடர்ச்சியான செயற்பாடுகள் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்துக்கான அங்கீகாரத்தையும் ஏற்புடைமையினயைும் வளர்த்து வருகின்றன.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் உருவாக்கப்பட்டபோது எம்மைப்பார்த்து ஏதோ ஒரு வகை உணர்ச்சி வசப்பட்டநிலையில் இதனை இவர்கள் உருவாக்குகிறார்கள் - ஓரிரண்டு ஆண்டுகளில் செயலிழந்து போய்விடுவார்கள் என எதிர்பார்த்த பல அரசுகளும் எமது தொடர்ச்சியான செயற்பாடுகளின் காரணமாக இன்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தை உன்னிப்பாக அவதானித்து வருகின்றன.

கிழக்குத் தீமோர், கயானா போன்ற நாடுகளின் முன்னாள் அரசதலைவவர்களும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் முன்முயற்சிகளுடன் தம்மை இணைத்துக் கொண்டமையும் இவ் அமர்வில் கொசாவா நாட்டின் முன்னாள பிரதி அரசதலைவர் பங்கு கொள்வதும் நமக்குக் கிடைத்து வரும் அங்கீகாரத்தின் பிறிதொருவகை அடையாளங்களாக இங்கே வெளிப்படுகின்றன.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தமிழர் தேசம் பின்பற்றவேண்டிய அரசியற்பாதையினை வகுப்பதில் முன்னோடியாக இயங்கி வருகிறது என்பதனையும் நாம் கவனத்தில் கொள்ள முடியும். ஈழத் தமிழர் தேசிய அரசியலும், தமிழர் இறையாண்மை மீட்புப் போராட்டமும் தென்னாசியாவினதும் இந்து மகாசமுத்திரத்தினதும் புவிசார் அரசியல் பொருளியலுடன் நெருங்கிப் பின்னிப் பிணைந்தவை என்பதனையும் இவற்றைக் கையாள ஈழத் தமிழர் தேசத்துக்கான வெளியுறவுக்கொள்கை அவசியம் என்பதனையம் வெளிப்படுத்தி அச் சிந்தனைகளுக்குக்கமைய நாம் செயற்பட்டு வருகிறோம்.

இச் சிந்தனை தற்போது தாயகத்திலும் வளர்ச்சி அடைந்து வருவதனை நாம் கவனிக்க முடிகிறது. இது நம்பிக்கை தரும் ஒரு விடயமாகும்.

தமிழீழ மக்களுக்கெதிரான சிங்களத்தின் இனவழிப்பினை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தின் முன்னாலோ அல்லது அதற்கிணைவான ஓர் அனைத்துலக பொறிமுறையின் ஊடாகவோ விசாரணை செய்து தமிழ் மக்களுக்கு ஈடு செய் நீதி வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டினை நாம் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே முன்வைத்துச் செயற்பட்டு வருகிறோம். இந் நிலைப்பாடடை வலியுறுத்தி நாம் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட மக்களின் கையொப்பங்களைச் சேகரித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபைக்கு அனுப்பியிருந்தோம்.

ஆரம்பத்தில் இந் நிலப்பாட்டை ஏற்கத் தயங்கிய பலரும் இந் நிலைப்பாட்டை பின்னர் ஏற்றுக் கொண்டதும் அத்தோடு தமிழ்நாடு சட்டசபை மற்றும் வடமாகாணசபை உட்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அவைகளும் அதனை வலியுறுத்தித் தீரமானங்கள் நிவைறவேற்றிய நிகழ்வுகளும் எமக்கு நிறைவத் தந்த விடயங்களாகும்.

தமிழர் தலைவிதி தமிழர் கையில் என்ற நிலைப்பாட்டின் அடிப்படையில் பொது வாக்கெடுப்புக்கான மக்கள் இயக்கத்தை உருவாக்கி தமிழீழத் தனியரசு என்ற தீர்வினையும் உள்ளடக்கிய பொது வாக்கடுப்பின் அடிப்படையில் ஈழத் தமிழர் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்ற கருத்துவாக்கத்தை ஏற்படுத்த நாம் செயற்பட்டு வருகிறோம். பொதுவாக்கெடுப்புக் கோரிக்கைக்கு ஆதரவாகத் தமிழ்நாடு சட்டசபை தீர்மானத்தை நிவேேற்றியிருக்கிறது.

தமிழ் மக்களைக் காயப்படுத்தும் வகையிலும் தமிழர் அடையாத்துக்கு ஒரு பயங்கரவாத விம்பம் கொடுக்கும் வகையிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது பயங்கரவாத முத்திரை குத்தி சட்டரீதியாக விடுதலைப்பலிகள் அமைப்பு மீது விதிக்கப்பட்ட தடைகளை எதிர்த்து நாம் செயற்பட்டு வருகிறோம்.

அண்மையில் பிரித்தானியாவில் நாம் மேற் கொண்ட நடவடிக்கை முன்னேற்றம் கண்டிருக்கிறது. பிரித்தானியாவில் விடுதலைப்புலிகள் அமைப்பு மீது பயங்கரவாதப் பட்டம் சூட்டித் தடை விதிக்கப்பட்ட முறை பிழை எனத் தீர்ப்பாயம் கூறியுள்ளது. இது ஒரு சிறிய வெற்றிதான். ஆனால் அரசொன்றின் முடிவு தவறு என வெளிப்படுத்தப்பட்ட முக்கியமானதொரு வெற்றி என்பனை நாம் இங்கு கவனத்திற் கொள்ள முடியும்.

இந் நடைமுறையின் இதன் இறுதி முடிவு முறித்து வாதப்பிரதிவாதங்கள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தமது நடைமுறையைக் கையாள மூன்று மாத கால அவசாசம் தருமாறு பிரதிதானிய அரசு கோரியுள்ளது. இதன் இறுதி முடிவு பிரத்தானிய அரசு சார்பாக போகவும் கூடும்.

இருப்பினும் அரசுகளின் தமிழர் விரோத முடிவுகளை தொடர்ச்சியாக் கேள்விக்குள்ளாக்கி அரசியல் முடிவுகளில் மாற்றங்களை ஏற்படுத்தும் உத்தி சாரந்த செயற்திட்டத்தை நாம் வகுத்துச் செயற்பட்டு வருகிறோம். இந்தியா உட்பட ஏனைய தடை விதிக்கப்பட்ட நாடுகளிலும் அத் தடையை அகற்றுவதற்கான முயற்சிகள் வளர்ச்சியடைய எமது நடவடிக்கைகள் வழிகாட்டுபவை யாகவும் அமைந்து வருகின்றன.

இவற்றையெல்லாம் கூறும்போது நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் இப்பணிகளை முன்னெடுக்கும்போது எதிர் கொள்ளும் சவால்களையும் நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

நாம் அரசியல் இராஜதந்திர வழிகளில் போராடுதல் எனும் போது அரசுகளின் நலன்களையும் தமிழ் மக்களின் நலன்களையும் ஒருங்கிசைய வைப்பது என்பதன் ஊடாகவே நாம் முன்னோக்கிய பாய்ச்சலை மேற் கொள்ள முடியும்.

உலக அரசியல் ஒழுங்கு அரசுகளை மையம் கொண்டதாக இருப்பதாலும் அவை நலன்கள் என்ற அச்சில் சுற்றிச் சுழல்வதாலும் அரசற்றதோர் தேசமாகவுள்ள நமது குரல்கள் இந்த அரசுகளின் காதுகளில் இலகுவில் வீழ்ந்து விடாது என்பதைன நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அடிக்கு மேல் அடியடித்தால் அம்மியும் நகரும் என்ற தமிழ் முதுமொழிக்கேற்ப நாம் தொடர்ச்சியாக செயற்படுவது மட்டுமல்ல இந்தியா, அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளின் நலன்களையும் தமிழர் நலன்களையும் ஒத்திசைய வைக்கக்கூடிய வாய்ப்புக்களையும் உய்த்துணர்ந்து செயற்பட வேண்டியவர்களாக உள்ளோம். மேலும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் சிங்கள பௌத்த பேரினவாதத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழர் தாயகத்தில் தடைசெய்யுப்பட்ட அமைப்பாக இருப்பதனால் தாயகத்தில் எமது செயற்பாடுகளை நாம் விரிவுபடுத்துவதிலும் தாயகத்துடனான தொடர்புகளைப் பேணுவதிலும் எமக்கு வரையறைகள் உள்ளன.

இத்தகை வரையறைகளை நாம் தகவல் தொழில்நுட்பவளர்ச்சியின் உதவியுடன் இயன்றவரை கடந்து தான் செயற்பட்டு வருகிறோம்.

நாம் இலங்கைத்தீவில் சிங்கள பௌத்த பேரினவாதம் தனது உச்ச அதிகாரத்தை எட்டியிருக்கும் காலகட்டத்தினை நாம் இப்போது கடந்து வருகிறோம்.

இக் காலகட்டத்தின்போது தமிழர் தேசத்தின் மீதான இனவழிப்பினை உச்சப்படுத்த சிங்களப் பேரினவாதம் மேற்கொள்ளும் என்பதனை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். இதனால் இனி வரும் காலங்களில் ஈழத் தமிழர் தேசம் தமிழ்நாடு மற்றும் உலகத் தமிழர்கள் துணையுடன் தனது சக்தியெல்லாவற்றையும் திரட்டி சிங்கள பௌத்த பேரினவாதத்தின் இனவழிப்புக்கு எதிராகப் போராடியாக வேண்டும்.

இதற்கான வியூகங்களை நாம் வகுத்துக் கொள்ள வேண்டும். இதில் அடிப்படையானது ஈழத் தமிழர் தேசம் தனக்னெ பொது மூலோபாயத்துடனும் பல்வேறு தந்திரோபாயங்களுடனும் கூடிய பொது வேலைத் திட்டம் ஒன்றை வகுத்துக் கொள்ள வேண்டும். இத்தகையதொரு பொது வேலைத்திட்டம் தமிழரது இறைமை தமிழர்களின் கைகளில் உள்ளது என்ற நோக்குநிலையில் இருந்து வகுக்கப்பட வேண்டும்.

தென்னாசியாவின், இந்து மகாசமுத்திரத்தின் புவிசார் அரசியல் சமன்பாட்டின் பங்காளர்களாகத் தமிழ் மக்களை உருவெடுக்க வைக்க வேண்டிய தேவையினையும் இப் பொது வேலைத் திட்டம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

இத்தகையதொரு பொது வேலைத்திட்டம் உருவாக்கப்படுவது மட்டமல்ல இத் திட்டத்தினை செயற்படுத்துவதற்கான ஓர் ஐக்கிய முன்னணியினை தமிழர் தேசம் உருவாக்கிக் கொள்வதும் இன்றைய காலகட்டத்தின் கட்டாயத் தேவையாக உள்ளது என தனதுரையில் பிரதமர் வி. உருத்திரகுமாரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# ஸ்டாலின் எங்கு போட்டியிடுகின்றாரோ அதே தொகுதியில் நான் போட்டியிடுவேன் என்கிறார் சீமான்



சில நாட்களுக்கு முன்னர் சென்னையில் நடைபெற்ற கூட்டமொன்றில் சீமான் கலந்து கொண்டார். அப்போது, சட்டமன்றத் தேர்தலில் தாங்கள் எந்தத் தொகுதியில் போட்டியிடுவீர்கள் என்று பத்திரிகையாளர்கள் கேட்டபோது, அதற்கு பதிலளித்து சீமான் பின்வருமாறு கூறினார்.

"2021ல் நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கான களப்பணிகளில் நாம் தமிழர் உறவுகள் சிறப்பாக செயற்பட்டு வருகின்றனர். நான் போட்டியிடவிருக்கும் தொகுதியை மரியாதைக்குரிய ஐயா ஸ்டாலின் அவர்கள் தான் முடிவுசெய்யவேண்டும். அவர் எந்தத் தொகுதியில் போட்டியிடுகிறாரோ அந்தத் தொகுதியில் நானும் போட்டியிடவிருக்கிறேன். இனி திமுக-வுக்கு மாற்று அதிமுக அல்ல் திமுக-வுக்கு மாற்று நாம் தமிழர் தான் என்பதை உருவாக்குவோம்! திமுகவா? நாம் தமிழரா? திராவிடரா தமிழரா என்று மோதிப் பார்த்துவிடுவோம்! ஸ்டாலின் கருணாநிதி பிள்ளை, நான் பிரபாகரன் பிள்ளை" இவ்வாறு சீமான் அவர்கள் கூறியுள்ளார்.

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள 6 ஆவது சமகால முகாமைத்துவ சர்வதேச ஆய்வு மாநாடு



திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் 6ஆவது சமகால முகாமைத்துவ சர்வதேச ஆய்வு மாநாடு எதிர்வரும் 2021ஆம் ஆண்டு ஏப்ரல் 29,30ஆம் திகதிகளில் நடைபெறுவதற்குரிய ஏற்பாடுகள் தற்போது முடுக்கிவிடப்பட்டுள்ளன. பல விரிவுரையாளர்கள் சிரேஸ்ட் மாணவர்கள் ஆகியோர் இந்த விடயத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்கள் என எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

இதனையொட்டி, நிகழ்வை அறிமுகம் செய்யும் வகையிலான ஊடக சந்திப்பு செவ்வாய்க்கிழமை 29ம் திகதி நண்பகல் யாழ். பல்கலைக் கழக சபா மண்டபத்தில், முகாமைத்துவ கற்கைள் மற்றும் வணிக பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் பா.நிமலதாசன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில்யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.



முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் 6 ஆவது சமகால முகாமைத்துவ சர்வதேச ஆய்வு மாநாட்டுக்கான இணையத் தளத்தைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா சம்பிரதாய பூர்வமாக இயக்கி ஆரம்பித்து வைத்தார்.

இந்தச் சந்திப்பின் போது, ஆய்வு மாநாடு குறித்தமேற்படி ஊடகச் சநதிப்பில் தெரிவிக்கப்பட்ட விபரம் பின்வருமாறு உள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடமானது 6வது சமகால முகாமைத்துவ சர்வதேச ஆய்வு மாநாட்டினை நிலைபேறான அபிவிருத்திக்கான பிரச்சினைகள் மற்றும் சவால்கள், பொருளாதார தீர்வுகளுக்கு ஊக்கமளித்தல் என்ற ஆய்வுக் கருப்பொருளில் 2021ஆம் ஆண்டு சித்திரை மாதம் 29ம் மற்றும் 30ம் திகதிகளில் நடாத்த தீர்மானித்திருக்கின்றது.

எதிர்கால சந்ததியினருக்கான வளமான எதிர்காலத்தினை உருவாக்குவதுடன் நெருக்கடிகளினைத் தவிர்த்து வாய்ப்புக்களையும் அவர்களின் எதிர்பார்ப்புக்களினையும் நிவர்த்தி செய்யக்கூடியவாறான நிலைபேறான அபிவிருத்தியினை உருவாக்குவது தற்காலத்தில் மிக முக்கிய அம்சமாகக் கருதப்படுகின்றது.

நிலைபேறான அபிவிருத்தியானது பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழலினை ஒன்றிணைப்பதாகக் காணப்படுகின்றது. நாம் எல்லோரும் பல்வேறுபட்ட எதிர்பாராத சவால்களும் இடர்களும் மிகுந்த சகாப்தத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும். குறிப்பாக கொரோனா பேரிடர் மக்களின் அன்றாட வாழ்வாதாரத்தில் பரந்த தாக்கத்தினை ஏற்படுத்தி வருகின்றது.



இது தொடர்பில் வளர்ந்துவரும் நாடுகளுக்கிடையில் வேறுபாடுகள் அரிது. இவ் இடர் பல மில்லியன் வேலைவாய்ப்புகளினை ஆபத்து நிறைந்ததாக மாற்றியுள்ளது. அத்துடன் நாடுகளின் பொருளாதர , வறுமை மற்றும் நிறுவன அமைப்புக்ளின் முடக்க நிலை போன்றவற்றை தோற்றுவித்துள்ளது. இவை நிச்சயமற்ற எதிர்காலத்துக்கு வித்திட்டு வருகின்றது.

குறிப்பாக மனிதவளம், நிதி, வர்த்தகம், பொருளாதாரம், தொழில்நுட்பம் மற்றும் சந்தைப்படுத்தல் சார் சவால்களை தீர்க்கக்கூடிய பொறிமுறைகளை நிறுவுவதுடன் நிலைபேறான அபிவிருத்திக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் வழிகோலும் முகமாக இவ் ஆய்வுகள் அமையப்பெறுகின்றன.

அந்தவகையில் இவ் ஆய்வு மாநாடானது தனியே நிலைபேறான அபிவிருத்தியின் சமகால மாற்றத்தினை மட்டுமல்லாது எதிர்கால திட்டங்களை முன்கூட்டியே வகுக்கக்கூடிய நிலைபேறான அபிவிருத்தியினை உருவாக்கக்கூடிய வணிகச் செயற்பாடுகளை ஆய்வின் முடிவுகளாக வேண்டிநிற்கின்றன.

அதாவது தற்கால தீர்வுகளினை வழங்கவல்ல நிலைபேறற்ற அபிவிருத்தியின் மோசமான விளைவுகளை தவிர்க்கவல்ல நீண்டகால பொருளாதார விருத்தியினை ஏற்படுத்தகூடிய பிராந்திய, தேசிய மற்றும் சர்வதேச அளவிலான அபிவிருத்தியினை நோக்கியதான பார்வையில் இவ் 6வது சர்வதேச ஆய்வு மாநாடானது தனது கருப்பொருளினை உருவாக்கியுள்ளது.

இது வணிகங்களை முகாமை செய்தல், மனிதவள முகாமைத்துவம், நிறுவன நடத்தை, நிறுவன தொழில்நுட்பம், நிதி மற்றும் சந்தைப்படுத்தல், சுற்றுலாத்துறை மற்றும் பொருளாதார சமூகக்கொள்கைகள் போன்ற ஆய்வுப் பரப்புகளை கொண்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆய்வு இதழ்களில் பிரசுரிக்கக்கூடிய சந்தர்ப்பமானது பிரத்தியேகமாக வழங்கப்படுகின்றது. ஆய்வாளர்கள் ஆய்வுக் கட்டுரைகளினை மாசி மாதம் 26ஆம் திகதி வரை சமர்ப்பிக்க முடியும். இவ் ஆய்வு மாநாட்டின் ஏற்பாட்டுத் தலைவராக முகாமைத்துவ கற்கைள் மற்றும் வணிக பீடத்தினைச் சேர்ந்த கலாநிதி. ந. கெங்காதரன் செயற்படுகின்றார். இவ் ஆய்வு மாநாடு தொடர்பான மேலதிக தகவல்களினை https://iccm.maco.jfn.ac.lk இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த மாநாட்டிற்கு ஆக்கபூர்வமான கட்டுரைகளையும் ஆலோசனைகளையும் சமர்ப்பிக்குமாறு உலகெங்கிலும் உள்ள தகைசார்ந்தவர்களிடமிருந்து ஆதரவு எதிர்பார்க்கப்படுகின்றது.

## SCARBOROUGH-AGINCOURT MPP BABIKIAN CALLS FOR MEMORIAL HONORING TENDERCARE LIVING CENTRE FOR SENIORS

# மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் Babikian, Tendercare முதியோர் இல்லத்திற்குச் சென்று தனது அனுதாபங்களைத் தெரிவித்தார்



கனடாவின் ஒன்றாரியோ மாகாண அரசின் ஸ்காபுறோ அஜின்கோர்ட் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் திரு. அரிஸ் பாபிகியன் நேற்று திங்கட்கிழமை தனது தொகுதியில் அமைந்துள்ள சில தினங்களுக்கு முன்னர் சென்று அங்கு கொரோனா நோய்த் தொற்று காரணமாக மரணித்த பலரது இழப்புக்கள் தொடர்பாக தனது அஞ்சலியைத் தெரிவித்துக்கொண்டார்.

அவர் அங்கு தங்கியிருக்கும் முதியோர் மற்றும் அவர்களது உறவினர்கள் ஆகியோரோடு மிகவும் கவலையோடு உரையாடுகையில், “இந்த முதியோர் நிலையத்தில் இடம்பெற்ற இழப்புக்களுக்காக நான் மிகவும் வருந்துகின்றேன். இதற்கு முன்னர் நான் பல தடவைகள் இங்கு வந்து இங்கு வதியும் முதியோர் மற்றும் நண்பர்களோடு கொண்டாட்டங்களில் கலந்து கொண்டுள்ளேன். பலருடைய பிறந்த நாள் விழாக்கள் மற்றும் மகிழ்ச்சியான தருணங்களில் நான் அவர்களோடு இருந்திருக்கின்றேன். ஆனால், தற்போது நிகழ்ந்துள்ள சோகமான இழப்புக்கள் என்னை மிகவும் பாதித்துள்ளன. இந்த முதியோர் நிலையத்தில் கடமையாற்றும் பல பணியாளர்கள் மற்றும் சேவை வழங்குபவர்கள் ஆகியோரிடம் மகிழ்ச்சியாக உரையாடியிருக்கின்றேன். ஆனால் அவர்களும் இந்த வகையான இழப்புக்களால் அதிர்ச்சியடைந்துள்ளதை நான் கண்டு கவலையடைகின்றேன். இந்த இழப்புக்களால் மிகவும் பாதிக்கப்பட்டு கவலைக்குள்ளாகியுள்ள முதியோர்களின் உறவினர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு எனது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த நெருக்கடியான நேரத்தில் பெரும் அழிவுகளால் பாதிக்கப்பட்டுள்ள அவர்களின் துக்கத்தில் நானும் பங்கெடுக்கின்றேன். மேலும் இங்கு உயிரழந்த 43 முதியவர்களின் ஆத்மா சாந்தியடைய நான் பிரார்த்திக்கின்றேன்.” என்று தெரிவித்தார்.








*PS: The photos were taken before the COVID pandemic*

# எதைக் கொண்டு வருகின்றாய் இனிய புத்தாண்டே?

## கனடா உதயன் வாசகர் வட்டம் நடத்திய கவியரங்கு








கனடா "உதயன்" பத்திரிகையானது தனது 25வது வருடத்தில் காலடி எடுத்து வைக்கும் முகமாக 2021ம் ஆண்டை எதிர்பார்த்து காத்திருக்கும் இந்த வேளையில், தனது வெள்ளி விழா ஆண்டை சிறப்பாகக் கொண்டாடும் முகமாக, அதற்கு முன்னோட்டமாக, எதைக் கொண்டு வருகின்றாய் இனிய புத்தாண்டே? என்னும் கவியரங்கத்தை, கனடா உதயன் வாசகர் வட்டம் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை 26ம் திகதி நடத்தியது.

இணையவழி ஊடாக நன்கு திட்டமிட்ட வகையில் நடத்தப்பெற்ற மேற்படி கவியரங்கிற்கு கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் கவிஞருமான ஆர். என். லோகேந்திரலிங்கம் தலைமை தாங்கினார்.




முன்னரே ஏற்பாடு செய்யப்பட்ட வண்ணம் கவியரங்கில் பிரதானமாக கவிதை வாசிக்க, ஏழு கவிஞர்கள் பல நாடுகளிலிருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தார்கள்.

அவர்களில் கவிஞர் தமிழரசி (தமிழ்நாடு) கவிஞர் ஜவாத் மரைக்கார் (இலங்கை), கவிஞர் ஞான கணேசன் (கனடா) கவிஞர் வீணா பிரவீணா (சுவிற்சலாந்து), கவிஞர் கணபதி ரவீந்திரன் (கனடா) கவிஞர் மகேந்திரன் பெரியசாமி(அமெரிக்கா), கவிஞர் கோவிலூர் செல்வராஜா (இங்கிலாந்து) ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர். மேலும் கனடாவின் மொன்றியால் மாநகர் வாழ் எழுத்தாளரும் கவிஞருமாகிய வீணைமைந்தன் அவர்கள் கவிதா வாழ்த்து நிகழ்வை வழங்கி கவியரங்கத்தை நிறைவு செய்தார்.

முதலில் உதயன் மற்றும் நண்பன் இணையத்தளங்களின் தொழில்நுட்பப் பிரிவில் உதவியாளராகப் பணியாற்றும் விக்னேஸ் அவர்கள் தொடக்கி வைத்து அனைவரையும் வரவேற்று பின்னர் அங்குரார்ப்பண வைபவத்தை நடத்த எழுத்தாளரும் கவிஞருமான குயின்றஸ் துரைசிங்கம் அவர்களை அழைத்தார்.

தனது அங்குரார்ப்பண உரையை கவித்துவமாகச் படைத்து அதனை பலரும் இரசிக்கச் செய்தார் குயின்றஸ் அவர்கள். அவரது அந்தப் பங்களிப்பை பலரும் இன்று வரை பாராட்டிய வண்ணம் உள்ளார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அடுத்த கனடாவில் வாழ்ந்து வருபவரும் கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் மற்றும் கனடா கவிஞர்கள் கழகம் ஆகியவற்றின் ஸ்தாபகராக விளங்கும் கவிநாயகர் வி. கந்தவனம் அவர்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்ட வாழ்த்துச் செய்தியை கம்பீரமாக வழங்கினார். அவரது அந்த உரையை அனைவரும் இரசித்து அவரது வாழ்த்துக்களால் பூரிப்படைந்தனர்.

தொடர்ந்து திரு ஆர். என். லோகேந்திரலிங்கம், கவியரங்கை தலைமை தாங்கி நடத்தினார். அனைவரையும் வரவேற்றும், வாழ்த்தியும் தனது தலைமைக் கவிதையை வழங்கிய அவர்கள் பங்குபற்றும் கவிஞர்கள் பற்றிய அறிமுகத்தையும் செய்து சிறப்பாகச் ஒவ்வொருவரையும் வரிசையாய் அழைத்தார்.

அழைக்கப் பெற்ற ஏழு கவிஞர்களும் தங்கள் பங்களிப்பைச் சிறப்பாகச் செய்தார்கள். பார்வையாளர்களாக 60இற்கும் மேற்பட்டவர்கள் உலகின் பல நாடுகளிலிருந்தும் பங்குபற்றினார்கள்.

இறுதியில் கவிதா வாழ்த்து வழங்கிய வீணை மைந்தன் சிறப்பாக கவிதை வடிவில் கவிஞர்களை பாராட்டு வாழ்த்துரைத்தார். எங்கு கவிதைத் தமிழின் வாசம் இணையவழியாக வீசிய வண்ணம் இருந்தது என்றால் அது மிகையாகாது.

கவியரங்கம் அனைவரதும் பாராட்டுக்களைப் பெற்றது. மேற்படி கவியரங்கை சிறப்பாக நடத்துவதற்கு கனடாவின் "ரூபம்" இணையவானொலியின் அதிபர் திரு சங்கர் பல வழிகளிலும் உதவியாக இருந்தார்.

கவியரங்கம் நிறைவுற்றதும். பல கவிஞர்கள் எழுத்தாளர்கள் போன்ற பலர் பல நாடுகளிலிருந்தும் வந்து உரையாற்றினார்கள். பலரும் அனைத்தையும் பாராடடி இந்த வருடத்தில் உலகெங்குமிருந்த இடம்பெற்ற இறுதிக் கவியரங்கு என்ற பாராட்டை எமது இந்த கவியரங்கம் பெற்றதாக பாராட்டிச் சென்றார்கள்.





# சனிக்கிழமை உறவுகளின் கண்ணீரால் நனைந்தது முல்லைத்தீவு சுனாமி நினைவாலயம்

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)

**ஆ**ழிப்பேரலையால் உயிரிழந்தவர்களின் 16வது ஆண்டு நினைவு நிகழ்வு முல்லைத்தீவு நகரிலுள்ள சுனாமி நினைவாலயத்தில் 26 சனிக்கிழமை இடம்பெற்றது.

கடந்த 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி இடம்பெற்ற ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்திருந்தனர்.

உயிரிழப்புகள் மாத்திரமின்றி பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களும் அழிவடைந்த இந்த துன்பியல் நிகழ்வான ஆழிப்பேரலை அனர்த்தம் இடம்பெற்று இன்று 16 ஆண்டுகள் கடந்துள்ளன.

உயிரிழந்த தங்களுடைய உறவுகளை நினைந்து நாடளாவிய ரீத- அமைந்திருக்கின்ற சுனாமி நினைவாலய வளாகத்தில் சனிக்கிழமை காலை நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றது.

சுனாமி நினைவாலயத்தில் சனிக்கிழமை காலை விசேட வழிபாடுகள் இடம் பெற்றதோடு அங்கு உயிரிழந்தவர்களின் உறவுகள் பலர் கலந்து கொண்டு தமது உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

உறவுகள் தங்களுடைய உறவுகளை நிறைந்து உணர்வுபூர்வமாக இந்த நினைவேந்தல் நிகழ்வில் பங்கெடுத்துள்ளனர் நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக சுகாதார நடைமுறைகளை பேணி உயிரிழந்த தமது உறவுகளை அஞ்சலித்து வருகின்றனர்.

சுனாமி நினைவாலய வளாகம் மக்களின் கண்ணீர் மற்றும் அழு குரல்களால் நிறைந்து காணப்படுகின்றது.














# ஸ்ரீ ஆதிபராசக்தி இந்து ஆலயம்

**அனைவருக்கும் எமது புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்.**



**நித்திய பூசைகள் இடம்பெறுகின்றன.**

3021 Markham Rd, Unit 45,46 & 47

Scarborough, Ontario M1X 1L8

Tel.No: (416) 293-1226

ஆலயத்தில் பிரதி தினமும் செவ்வாய்க்கிழமைகளில் கட்டணமில்லாமல் இலவசமாக எலுமிச்சம் பழ விளக்கேற்றி அம்பாளை கூட்டு வழிபாடு செய்யும் நிகழ்ச்சி கடந்த 17 ஆண்டுகளாக நடைபெறுகிறது என்பதை மக்களுக்கு தெரியப்படுத்துகிறோம்.

குறிப்பு: ஐயா அவர்களால் சாதகம், பொருத்தம் பார்த்தல், பொதுப்பலன் சொல்லுதல், வியாபார விருத்தி, சாந்தி பரிகாரம் அனைத்தும் ஒழுங்கு செய்யப்படும்.

பிரம்மஸ்ரீ சந்திரமௌலி சாஸ்திரிகள்
ஆலய நிர்வாகம்

# பண்பாடு · மொழி · வரலாறு



## ஒன்ராரியோ மாணவர்களை நாம் ஆயத்துப்படுத்துகின்றோம்

**அவர்கள் உலகின் பிரஜைகளாக வருவதற்குரிய பாதையில்.**

தூர இருந்து கற்றல்-வீட்டிலிருந்து கற்றல் ஆகியவை இணையவழியாக கல்விச்சபை ஊடாக வழங்கப்படுகின்றது. 2.5 மணித்தியாலங்களை, ஒரு வாரத்தில், நேரடியாக முகம் பார்த்தும் சுதந்திரமாகவும் பயிலும் சந்தர்ப்பம்




TORONTO EDUCATION WORKERS

**தூர இருந்து கற்கும் திட்டத்திற்காக இன்றே பதிவு செய்யுங்கள்**

**OntarioOnlineLearning.ca**

# நேர்மையான ஒரு தமிழ்ப் பத்திரிகையாளரின் குரலை நசுக்கிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பு

**- கொழும்பிலிருந்து ராதாகிருஸ்ணன்**



இலங்கையில் கடந்த 30 ஆண்டுகளில் எத்தனையோ பத்திரிகையாளர்கள், கலைஞர்கள் என நூற்றுக்கணக்கான தமிழ் சிங்கள ஆங்கில மொழிப் பத்திரிகையாளர்களின் குரல்கள் பல்வேறு பிரிவினர்களால் நசுக்கப்பட்டுள்ளன. பலர். கொலைசெய்யப்பட்டுள்ளார்கள், பலர் காணாமல் ஆக்கப்பட்டவர்களாக மறைக்கப்பட்டுள்ளார்கள், அல்லது கொல்லப்பட்டுள்ளார்கள்.

தமிழ் பேசும் பத்திரிகையாளர்களான தராக்கி சிவராம், நடேசன், மயில்வாகனம் நிமலராஜன், சுப்பிரமணியம் இராமச்சந்திரன் போன்ற எத்தனையோ தமிழ் பேசும் பத்திரிகையாளர்கள் கோத்தபாய தரப்பாலும் அரச சார்பு தமிழ் அமைப்புக்களாலும் கொலை செய்யப்பட்டார்கள்.

இதைப்போலவே, லசந்த விக்கிரமதுங்க, பிரகீத் எக்னலிகொட, ரிச்சார்ட் டி சொய்சா போன்ற சிங்கள மற்றும் ஆங்கில பத்திரிகையாளர்களும் அரச தரப்பு இராணுவத்தினரால் கொல்லப்பட்டுள்ளார்கள். குறிப்பாக இவர்களுள் பலர் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபாய இராஜபக்ச தனது சகோதரர் மகிந்த ஜனாதிபதியாக இருந்த போது, பாதுகாப்புச் செலயாளராகப் பதவி வகித்தபோதே கொலை செய்யப்பட்டவர்கள் என்பது உலக நாடுகளே அறிந்த விடயமாகும்.

இதற்குப் பின்னரான காலப் பகுதியில் தான் அதாவது 2009 ஆண்டில் தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைகளும் போர்க்குற்றச் செயல்களும் இடம்பெற்றன என்பதும் வயதில் குறைந்த எமது பிள்ளைகளுக்குக் கூடத் தெரியும். ஆனால் நாம் மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கும் இங்கே காணப்படும் புகைப்படங்களுக்கும் சம்பந்தம் உள்ளனவா என்றால் "இல்லை" என்று ஒரே சொல்லில் பதில் சொல்லிவிடலாம். இடையில் விடயங்கள் தொடர்புடையவையாக உள்ளன என்பது மறுப்பதற்கில்லை.

இங்கே காணப்படும் படங்களில் தமிழத் தேசிய கூட்டமைப்புத் தலைவர் இரா சம்பந்தன், மாவை சேனாதிராஜா (முன்னாள் எம்பி) எம். சுமந்திரன் (இந்நாள் பாராளுமன்ற உறுப்பினர்) பத்திரிகையாளர் வீ.தேவராஜ் (முன்னாள் பிரதம ஆசிரியர், கொழும்பு வீரகேசரி வார இதழ்) ஆர். என். லோகேந்திரலிங்கம் (கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர்) இன்னும் சிலர் காணப்படுகின்றனர்.

இந்த புகைப்படங்கள் கூட 2009 இற்கு பின்னரே, அதாவது விடுதலைப் புலிகள் அமைப்பின் இருப்பானது இல்லாமற்போன பின்னரே எடுக்கப்பட்டவையாகும்.

புகைப்படங்களுக்கான சந்தர்ப்பங்கள் பின்வருமாறு:

கனடா உதயன் பத்திரிகை வருடாவருடம் நடத்திவருகின்ற "சர்வதேச விருதுகள்" விழாவில் மாவை சேனாதிராஜா அவர்களுக்கு, இலங்கையர்களுக்கான சிறப்பு விருது வழங்கப்பெற்றது. மேற்படி விருது பெறுநராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான சார்பான விடயங்களாகக் கருதப்பட்டமை, அவர் தனது இளமைக் காலத்தில் தனது கல்வியைத் துறந்து தமிழ் மக்களது சுதந்திரத்திற்காக தன்னை அர்ப்பணித்துக் குரலெழுப்பிய காரணத்தாலும், தொடர்ச்சியாக இலங்கை அரசின் கொடிய சிறைகளுக்குள் துன்பங்களை அனுபவித்த காரணங்களுக்காகவும். பின்னர் தொடர்ச்சியாக பாராளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்து குரல் கொடுத்து வந்தமைக்காகவுமே.

2012ம் ஆண்டு கனடாவில் நடைபெற்ற விருது விழாவில் அவருக்கு விருதை வழங்குவதாக திட்டமிட்டிருந்தாலும் கனடிய தூதரகம் அவருக்குரிய விசாவை வழங்காக காரணத்தால் கனடாவில் வைத்து விருது வழங்கப்படவில்லை.

பின்னர் உதயன் பிரதம ஆசிரியர் அவர்கள் அதே ஆண்டு இறுதியில் கொழும்பிற்குச் செல்ல நேர்ந்த போது, பம்பலப்பிட்டியில் அமைந்திருந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கொழும்பு அலுவலகத்தில் இந்த விருதை வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டது. அந்த சிறிய வைபவத்திற்கு தலைவர் இரா சம்பந்தன், எம். சுமந்திரன் ஆகியோரும் வருகை தந்து சிறப்பித்தார்கள்.

மேற்படி வைபவத்திற்கு தனது காரிலேயே அப்போது வீரகேசரி வார பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருந்த வீ. தேவராஜ் அவர்கள் எமது ஆசிரியர் லோகேந்திரலிங்கத்தை அழைத்துச் சென்றார்.

ஆனால் அந்த வைபவத்தில் தான் கலந்து கொள்வதை திரு. தேவராஜ் விரும்பவில்லை. லோகேந்திரலிங்கம் வற்புறுத்தியதன் காரணத்தால், பின்னர் தனது முடிவை மாற்றிக் கொண்டார்.

வைபவம் முடிந்து, இருப்பிடம் நோக்கிச் சென்றபோது, திரு தேவராஜா உதயன் ஆசிரியர் லோகேந்திரலிங்கத்திடம் சில விடயங்களைக் கூறியுள்ளார்.

வன்னி மண்ணில் விடுதலைப் புலிகள் இராணுவ பலத்தோடும் உலகின் பார்வைக்குட்பட்டு செயற்பட்டு வந்த காலத்திலேயே வீரகேசரி ஆசிரியர் திரு தேவராஜ் வன்னி தலைமையோடு மிகவும் நெருக்கமாக உறவைக் கொண்டிருந்தார். ஒரு நேர்மையான பத்திரிகையாளன் என்ற வகையில் விடுதலைப் புலிகள் தொடர்பான நியாயமான கோரிக்கைகளை தனது பத்திரிகையில் தவறாமல் பிரசுரித்து வந்தார். சமாதான காலங்களில் வன்னிக்கு நேரடியாகச் சென்று தலைவர் பிரபாகரன் மற்றும் தமிழ்ச் செல்வன் ஆகியோரை சந்தித்து பேட்டிகள் எடுத்து வீரகேகரியில் எவ்வித தயக்குமும் இன்றி பிரசுரம் செய்தார்.

வீரகேசரி நிர்வாகத்திற்கு அரசின் பக்கம் இருந்து அழுத்தங்கள் வந்து, பின்னர் அவை திரு தேவராஜ் அவர்களை நோக்கி பிரயோகிக்கப்பட்டாலும், அவற்றை எதிர் கொண்டு தனது பணியை நிறுத்திவிடாமல் விடுதலைப் புலிகளின் நியாயமாக செய்திகளை பிரசுரம் செய்வதும், அவர்களோடு தொலைபேசி மூலமாக உரையாடுவதையும் வழக்கமாகக் கொண்டு செயற்பட்டார் திரு தேவராஜ்.

இன்னொரு பக்கத்தில் நாம் திரு தேவராஜை நோக்கினால், அவர் வடக்கு அல்லது கிழக்கு பிரதேசங்களைச் சேர்ந்தவர் அல்ல, இலங்கையின் மலைநாட்டில், பதுளைக்கு அருகில் உள்ள ஒரு தேயிலைத் தோட்டத்தில் பிறந்த அவர் திறமையோடு கல்வி கற்று, யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்று பின்னர் தமிழ்நாட்டின் தஞ்சாவூர்ப் பல்கலைக் கழகத்தில் முதுமானிப் பட்டம் பெற்று நாடுதிரும்பினார்.

ஆனால் சிறுவயதிலிருந்தே சமூக நோக்கத்திற்காக குரல் கொடுத்து வந்தவரும் மலை நாட்டுத் தொழிலாளர்களின் துயரங்களை நேரில் கண்டு அவர்களுக்காக அனுதாபப் பட்டவருமான திரு தேவராஜ், தமிழ் மக்களின் விடிவிற்காக போராடிய விடுதலைப் புலிகள் அமைப்பின் நியாயமான கோரிக்கைகளை எப்போதுமே ஏற்றுக்கொண்டு வந்த ஒருவராக விளங்கினார். யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் பயின்றபோதே அங்கு மாணவர்களின் போராட்டங்களில் முக்கிய பங்கெடுத்தார்.

பின்னர் தனது விருப்பத்திற்கு ஏற்ப பத்திரிகைத் துறையில் இணைய எண்ணி வீரகேசரி பத்திரிகையின் உதவி ஆசிரியராக இணைந்து பின்னர் பிரதம ஆசிரியராக பதவி உயர்வு பெற்றார். அப்போது கூட தனது கொள்கையிலிருந்து விலகி நடப்பவராக அவர் மாறவில்லை.

ஆனால் நாட்கள் எப்போது போல இருக்கவில்லை. விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்குப் பின்னர், தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வழி தவறிச் சென்றதையும் முக்கியமாக சுமந்திரனின் அரசியல் பிரவேசத்திற்குப் பின்னர் மிகவும் மோசமான தமிழர் விரோத நடவடிக்கைகளில் எவ்வித கூச்சமுமின்றி செயற்படுவதையும் கவனித்த தேவராஜ் அவர்களை தமிழ்த் தேசிய கூட்டமைப்பை நேரடியாகவே விமர்சனம் செய்யத் தொடங்கினார்.

ஆனால், அவருக்கு சாதகமான சூழ்நிலை என்பதிலிருந்து பல மோசமான விடயங்களை சந்திக்க நேர்ந்தது. ஒரு பக்கம் அரசாங்கம், இன்னொரு பக்கம், தமிழ்த் தேசியக் கூட்டம்,மூன்றாவது அணியாக கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் ஆகிய பக்கங்களிலிருந்து பயங்கரமான அச்சுறுத்தல்கள், எச்சரிக்கைகள், பயமுறுத்தல்கள் அனைத்தும் தினமும் ஏவிவிடப்பட்டன.

இறுதியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமைப் பீடம் மற்றும் இந்திய தூதரகம் ஆகியன இணைந்து வீரகேசரியின் நிர்வாகத்திற்கு கொடுத்த அழுத்தம் காரணமாக வீரகேசரி தேவராஜ் என்று மரியாதையோடு அழைக்கப்பட்டு வந்த துணிகரமான பத்திரிகை ஆசிரியர் ஒருவர் வீதிக் கொண்டுவரப்பட்டார். அவரது குரல் நசுக்கபட்ட ஒன்றாகியது.

பதவியிலிருந்து அகற்றப்பட்டாலும், திரு தேவராஜிற்கு துன்புறுத்தல்கள் , பயமுறுத்தல்கள் ஆகியன தொடர்ந்த வண்ணம் இருந்தன.

வேறு பத்திரிகை நிறுவனங்களோடு அல்லது ஊடக நிறுவனங்களோ திரு தேவராஜ் என்னும் துணிச்சலான பத்திரிகையாளருக்கு பதவி எதையும் வழங்கக் கூடாது என்று "உயர் பீடங்களில்" இருந்து கட்டளைகள் அனுப்பப்பட்டன.



தேவராஜ் அவர்கள் வசித்து வரும் வீட்டிற்கு கூட எத்தனையோ தாக்குதல்கள் நடத்தப் பெற்றன. ஆனால் அதிஸ்டவசமாக அவரது உயிருக்கு எவ்விதமான பாதிப்புக்கள் ஏற்படவில்லை. அதற்கு காரணங்கள் பல இருக்கலாம்.

ஆனால் துணிச்சலான பத்திரிகையாளர் திரு தேவராஜ் தற்போது குரலற்றவராக, தனது கருத்துக்களை எந்த ஒரு தளத்திலும் ஏற்ற முடியாதவராக, இன்னும் சொல்லப் போனால் எண்ணற்ற கருத்துக்களை கொண்டிருந்தாலும் அவற்றை தனக்கு அடக்கியபடி வெகுண்டெழ முடியாதவராக அந்த மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

அவர் பிரதம ஆசிரியர் என்ற உயர்ந்த பீடத்திலிருந்த போது பலன் பெற்ற பலர் இப்போது அவரோடு பேசுவதற்கே அஞ்சுகின்றார்கள். ஏனென்றால் தங்களுக்கு "ஏதும்" நடந்து விடக் கூடாது என்று.. இது தான் தமிழர்கள் மத்தியில் உள்ள ஒரு சாபக்கேடான விடயம்..





CIBC
இந்தப் பொங்கலில் குடும்பத்துடன் அதிகம் பகிரவும்
$0 எனும் பரிமாற்றக் கட்டணத்துடன்1, இந்த விடுமுறை காலத்தில் நீங்கள் இன்னும் அதிகம் கொடுக்கலாம்.
• இப்போது உங்கள் தகுதியான CIBC கிரெடிட் கார்டு மூலம் பணம் செலுத்தி, வெகுமதிகளைப் பெறுங்கள்2,3
• CIBC Online Banking® அல்லது CIBC Mobile Banking® மூலம் எந்தச் சாதனத்திலிருந்தும் எளிதாகப் பணம் அனுப்புங்கள், அது 24 மணிநேரத்திற்குள் வழங்கப்படும்4
• உங்கள் முதல் பரிமாற்றத்தில் $50 பெற்றிடுங்கள்5. பயன்படுத்துவதற்கான சலுகைக் குறியீடு: GMT50
Learn more at cibc.com/globaltransfer
CIBC Global Money Transfer™
1CIBC foreign exchange rates apply. A CIBC Global Money Transfer and a Foreign Exchange transaction count towards your allowable transaction limit. Bank account transaction fees may apply. Must have a CIBC savings or chequing account, personal line of credit or an eligible credit card to send a CIBC Global Money Transfer. 2Only primary cardholders can use their eligible credit card account to pay for the CIBC Global Money Transfer™ service. 3CIBC does not charge interest on a CIBC Global Money Transfer appearing on your statement if we receive full payment of the Amount Due (or for a CIBC Global Money Transfer that has been converted to an Installment Plan during that statement period, if we receive payment in full of the Balance) by the payment due date for that statement. Capitalized terms in this footnote have the meanings set out in the CIBC Cardholder Agreement. 4Most transfers are completed by the next business day; some transfers require 2 to 3 business days. CIBC Cube Design is a trademark of CIBC. All other trademarks are owned by CIBC. 5If you have a CIBC personal bank account (savings, chequing or a personal line of credit) but have not yet tried CIBC Global Money Transfer ("GMT"), request a GMT transfer and you will receive $50 CAD in your CIBC account in 4-6 weeks.


TEAM ROYALAN
Wishing you and your family a Happy, Healthy and Prosperous New Year 2021.
We would like to give a special thanks to all my clients, vendors , mortgage agents, lawyers, and family & friends for making 2020 a successful year !
நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் இனிய
நத்தார், புதுவருட வாழ்த்துகளை
தெரிவித்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.
உங்கள் அன்புக்கும், ஆதரவுக்கும்
எம் மனமார்ந்த நன்றி!
TOP 5% SALES REP IN CANADA
SUPER ELITE CLUB 2020
CHAIRMAN CLUB AWARD WINNER
RAGHU THILLAINATHAN
SALES REPRESENTATIVE
416.629.5800
KAILAIN THILLAINATHAN
SALES REPRESENTATIVE
647.668.8276
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/Future Realty Inc., Brokerage*
Bus: 905.201.9977 *Independently Owned And Operated

# பரவுவதைத் தடுக்கவும்.

## கோவிட்-19 மிகவும் ஆபத்தானது.

## வீட்டிலேயே இருக்கவும்.

## உயிர்களைக் காப்பாற்றுங்கள்.



**ontario.ca/coronavirus**
இணையத்துக்கு வருகை தாருங்கள்

ஒன்ராறியோ அரசுக்காக ஒன்ராறியோ அரசினால் வழங்கப்பட்டது.

Ontario


Welcome
2021
Happy New Year!
Bala Logendralingam
REALTOR®
EXECUTIVE Award
100% Award
RE/MAX
COMMUNITY Realty Inc., Brokerage
Office: 416-287-2222
647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9


Dream Design Build
Paramount
Custom Homes Ltd.
416-268-5296
www.paramountcustomhomesltd.net
REGISTERED BUILDER
TARION
TARION WARRANTY CORPORATION
Incredible Quality
Quick Turnaround
Competitor Prices

# Canada VISA

கூடிய விரைவில் உங்கள் கைகளில்

## இலங்கையிலுள்ள உங்கள் உறவினர்கள் CANADAவிற்கு அழைத்து வர எம்மை நாடுங்கள்

**STUDENT VISA**

ஏற்பாடுகளை இலகுவான முறையில் விரைவில் செய்து தருபவர்கள்.

**TOURIST VISA**

தனியாகவோ, குடும்பத்தினருடனோ உல்லாசமாக வருவதற்கான ஏற்பாடுகளை செய்து தருபவர்கள்.

**VISIT VISA**

பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா வருவதற்கான ஏற்பாடுகளை செய்து தருபவர்கள்.

**REFUSED VISA**

உங்கள் மறுக்கப்பட்ட விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.

**BUSINESS VISA**

உங்கள் வர்த்தகத்தினை மேலும் பெருக்கும் நோக்கத்துடன் கனடா வருவதற்கான ஏற்பாடுகளை செய்து தருபவர்கள்.

**10 வருட கால நம்பிக்கையான சேவை**



P. Jegan
Director - Flex Institute
+94 777 761 346

flex Institute
Step Towards a Bright Future

6A, Parakumba Place, Colombo 06, Sri Lanka.
www.flexinstitute.lk Flex Institute
flexinstitute04@gmail.com

Hotline: +94 777-761 346



P. Vijay
Director - Flex Institute
+94 777 555 026



# DEBT FREE CREDIT SOLUTIONS

DF CREDIT SOLUTION

*We offer* **FREE of Consultation***

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்

  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்

  We shield you from your creditors and offer you a guranteed protection
- கடன் கொடுத்தவர்களின் அச்சுறுத்தல்கள், சட்ட நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு

  We package a custom solution to protect all your assets including your hard earned property, vehicle, insurance, RRSP, TFSA, RESP, Shares
- உங்கள் சேமிப்பு, சொத்து, வாகனம், முதலீடுகள் பாதுகாப்பிற்கு உரிய வழிமுறை செய்தல்

  We arrange a sensible Repayment Plan minimizing potential losses and avoiding bankruptcy



*Conditions Apply

**416.834.7227**

Tel 416.434.1522
Fax 1.877.800.7899

Elankeeran .T
Certified Insolvency Counsellor
By Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)

Head Office: 10 Milner Business Court, Suite 334, Toronto, ON M1B 3C6
Branch Office: 101 Palstan Road, Mississauga, ON L4Y 4E7

Info@DebtFreeCreditSolution.ca www.DebtFreeCreditSolution.ca

# Sunshine Florist

Sunshine Florist
Creative Solutions For All Your Floral Needs

Creative Solutions For All Your Floral Needs.

Vaughan நகரில் வாழும் தமிழ் மக்களுக்காக புதியதோர் பூக்கடை



## சண்சைன் பூக்கடை



2021, ஜனவரி மாதம் 19ம் திகதி
செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு
திறந்து வைக்கப்படும்

- திறப்பு விழாவை முன்னிட்டு விசேட விலைகளில் உங்களுக்கு தேவையான பூக்கள் மற்றும் மாலைகள்
- மற்றும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மல்லிகை, கனகாம்பரம் போன்ற பல வகைப் பூக்கள்
- மற்றும் மலர் மாலைகள் ஆகியன எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

**We serve:**

Cut Flowers
Fresh Jasmine
Bouquets
Wedding Arrangements
Vase Arrangements
Funeral Flowers
Sympathy Flowers
and more...

905 553 0777
sunshineflorist777@gmail.com

112 - 9441 Jane Street
Vaughan ON,L6A 4H8



# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).




5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

# ஒரு கரும்பின் விலை ரூ.20 வயலில் 'பேனர்' வைத்த விவசாயி

ஒரு கரும்பு விலை ரூ.20 என நிர்ணயம் செய்து வயலிலேயே விவசாயி பேனர் வைத்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.பொங்கல் பண்டிகைக்கு இன்னும் 15 நாட்கள் உள்ள நிலையில் பொங்கல் கரும்புகளை கொள்முதல் செய்யும் பணிகள் வியாபாரிகள், அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள். இந்த நிலையில் ஒரு கரும்பு விலை ரூ.20 என நிர்ணயம் செய்து வயலிலேயே விவசாயி பேனர் வைத்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

தமிழர் பண்டிகைகளில் முக்கியமான பண்டிகை பொங்கல் பண்டிகை ஆகும். பொங்கல் பண்டிகை தை மாதம் முதல் தேதி கொண்டாடப்படுகிறது. பொங்கல் பண்டிகையன்று அதிகாலையில் குளித்து விட்டு உழவர்கள் புத்தாடை அணிந்து புது அரிசியை பொங்கலிட்டு கதிரவனுக்கு படைத்து வழிபாடு செய்வார்கள். இந்த பொங்கல் பண்டிகையின் முக்கிய இடத்தைப் பிடிப்பது கரும்பு ஆகும்.

தஞ்சை மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் கரும்பு மட்டும் 500 முதல் 700 ஏக்கர் வரை பயிரிடப்பட்டு வருகிறது. கடந்தாண்டு பொங்கல் கரும்பு விற்பனை மந்தமாக காணப்பட்டதால் விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டது. இதையடுத்து இந்த ஆண்டு சாகுபடி பரப்பளவு குறைந்த அளவே நடைபெற்றது. இந்த நிலையில் புரெவி புயல் காரணமாக ஒரு வாரத்துக்கு மேல் தொடர்ந்து மழை பெய்ததால் சாகுபடி செய்த கரும்புகள் சாய்ந்தன.

இதையடுத்து விவசாயிகள் நான்கு அல்லது ஐந்து கரும்புகளை ஒன்றாக சேர்த்து கட்டி பராமரித்து வந்தனர். பொங்கல் பண்டிகைக்கு இன்னும் 15 நாட்களே உள்ள நிலையில் தற்போது விவசாயிகளிடமிருந்து




கரும்பை கொள்முதல் செய்வதற்காக வியாபாரிகளும் தீவிரம் காட்டி வருகிறார்கள். கடந்த ஆண்டு ஒரு கரும்பு ரூ.11க்கு கொள்முதல் செய்யப்பட்டது. இந்த ஆண்டு விவசாயிகள் ரூ.15க்கு மேல் கொள்முதல் செய்யப்படும் என எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள்.

இந்த நிலையில் தமிழக அரசும் பொங்கல் பரிசுத்தொகுப்புடன் குடும்ப அட்டைதாரர்களுக்கு முழு கரும்பு வழங்கவும் உத்தரவிட்டுள்ளார். இதனால் இந்த ஆண்டு கரும்புக்கு நல்ல விலை கிடைக்கும் என விவசாயிகள் நம்பிக்கையுடன் காத்திருக்கிறார்கள். விவசாயிகளிடம் இருந்து முன்கூட்டியே கரும்புகளை கொள்முதல் செய்வதற்கான பணிகளில் வியாபாரிகள் தீவிரம் காட்டி வருகிறார்கள். இதே போல் ரேஷன் கடைகள் மூலம் பொதுமக்களுக்கு வழங்குவதற்காகவும் அதிகாரிகள், கூட்டுறவு சங்கத்தினர் தீவிரம் காட்டி வருகிறார்கள். ஆனால் அவர்கள் 15 ரூபாய்க்கும் குறைவாக கேட்பதால் விவசாயிகள் தயக்கம் காட்டி வருகிறார்கள்.

தஞ்சையை அடுத்த சூரக்கோட்டை, காட்டூர், துறையுண்டார் கோட்டை, வரவு கோட்டை உள்ளிட்ட பகுதிகளிலும் ஏராளமான ஏக்கர்களில் விவசாயிகள் கரும்பு சாகுபடி செய்துள்ளனர். அப்படி செய்த விவசாயிகள் அனைவரும் சாலையோரங்களில் சில கரும்புகளை கொண்டுவந்து வைத்து சாலையில் வரும் வியாபாரிகளுக்கு தங்கள் வயலில் கரும்பு விற்பனைக்கு உள்ளது என்பதை தெரிவிக்கும் வகையில் வழிநெடுக வைத்துள்ளதை காணமுடிகிறது.

வரவு கோட்டை பகுதியில் ஒரு விவசாயி தனது வயலில் கரும்பு விற்பனைக்கு தொடர்பாக ஒரு பிளக்ஸ் பேனர் வைத்துள்ளார். அதில் ஒரு கரும்பு ரூ.20 என விலை நிர்ணயம் செய்து அதில் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து கரும்பு சாகுபடி செய்துள்ள விவசாயி வினோத் கூறுகையில், ''நான் கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக பொங்கல் கரும்பு சாகுபடி செய்து வருகிறேன். ஒரு ஏக்கருக்கு கரும்பு விதை ஆட்கள் கூலி, வாடகைக்கு தண்ணீர் பாய்ச்சுவது என ரூ.70 ஆயிரம் முதல் ரூ. 1 லட்சம் வரை செலவாகிறது. இதில் பெரும்பாலான விவசாயிகள் நிலத்தை குத்தகைக்கு எடுத்து தான் கரும்பு சாகுபடி செய்துள்ளனர். தற்போது முதல் பண்டிகை நெருங்கி வருவதால் வியாபாரிகள் அதிக அளவில் கொள்முதல் செய்ய வருகிறார்கள்.

ஆனால் அவர்கள் விலை குறைவாக கேட்கிறார்கள். இதனால் நான் எனது வயலில் கரும்பு ஒன்று ரூ.20க்கு வாங்கிக் கொள்ளலாம் என்பதை தெரிவிக்கும் வகையில் பேனர் வைத்துள்ளேன். ரேஷன் கடைக்கு கொள்முதல் செய்வதற்காக வருகிறார்கள். அவர்களும் குறைவாகத்தான் கேட்கிறார்கள். 15 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்தால்தான் விவசாயிகளுக்கு கட்டுப்படியாகும். கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு குறைந்த அளவுதான் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பொங்கல் பண்டிகை நெருங்க நெருங்க இன்னும் விலை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கிறோம்''என்றார்.

# பொங்கல் பண்டிகை நெருங்குவதால் வாரச்சந்தையில் குவிந்த மண்பாண்ட பொருட்கள்



பொங்கல் பண்டிகை நெருங்குவதால் செய்துங்கநல்லூர் வாரச்சந்தையில் மண்பாண்ட பொருட்கள் விற்பனைக்கு வந்துள்ளது. செய்துங்கநல்லூரில் வாரச்சந்தை நடந்தது. இந்த சந்தையில் பொங்கல் பண்டிகைக்காக மண்பாண்ட பொருட்கள் விற்பனைக்கு வந்தது.

இந்த பொருட்களில் சட்டி, உலைமூடி, பானை, அடுப்பு, அடுப்பு கட்டி உள்பட பல பொருள்கள் விற்பனைக்கு கொண்டு வந்தனர். ஆனால் எதிர்பார்த்தபடி விற்பனை இல்லை. சந்தையில் அடுப்பு ரூ.150 , பானை ரூ. 200, சட்டி ரூ. 100, அண்டைகட்டி மூன்றுக்கு ரூ. 300, என விற்று வருகிறார்கள்.

கடந்த வருடம் விற்றது போல இந்த ஆண்டு வியாபாரம் இல்லை. மிகக்குறைவாகவே பொருள் விற்று வருகிறது. இதுகுறித்து மண்பாண்ட வியாபாரி பேச்சியம்மாள் கூறியதாவது:

செய்துங்கநல்லூரில் மண்பாண்ட தயாரிப்பாளர்கள் சுமார் 20க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் தொழில் செய்து வந்தோம். பொங்கல் நேரங்களில் மூன்று இடங்களில் சூளை வைத்து விடுவார்கள். ஆனால் தற்போது மண்பாண்ட மோகம் குறைந்தது. மூலப்பொருள் எடுக்க தடை உள்பட பல பிரச்சனைகளால் இந்த தொழில் மிகவும் நசிந்து வருகிறது.

கார்த்திகை தீபம், பொங்கல் பண்டிகை போன்ற நாட்களில் மண்பாண்டம் வியாபாரம் ஓரளவு நடைபெறும். ஆனால் இந்த ஆண்டு வியாபாரம் மிக மந்தமாக உள்ளது. பலர் பொருள் பற்றி கேட்டு செல்கிறார்கள். ஆனால் வாங்கவில்லை. காலையில் இருந்து 10 பொருள் கூட விற்கவில்லை. ஆனாலும் பொங்கலுங்கு மேலும் சில நாட்கள் உள்ளன. எனவே செய்துங்கநல்லூர் சந்தை பொங்கலுக்கு என மீண்டும் கூடவுள்ளது. அந்த சமயத்தில் நாங்கள் எதிர்பார்த்த படி நாங்கள் உருவாக்கிய பொருள் விற்கப்படும் என நம்புகிறேன் என்றார்.

சமையல், உள்பட நலன் தரும் தன்மை மண்பாண்ட பொருள் மூலம் மக்களுக்கு கிடைக்கிறது. ஆயினும் மண்பாண்ட தொழிலாளிகளை உற்சாகப்படுத்த பொங்கலுக்கு அனைவரும் இந்த பொருள்களை வாங்கி பயனடைய வேண்டும் என மண்பாண்ட தொழிலாளிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பிரிட்டனுக்கான விமான போக்குவரத்து தடை மேலும் ஒரு வாரம் நீட்டிப்பு: மத்திய அரசு

புதிய வகை உருமாறிய கொரோனா பரவலால் பிரிட்டனுக்கான விமான போக்குவரத்து தடையை மத்திய அரசு மேலும் ஒரு வாரம் நீட்டித்துள்ளது.

பிரிட்டனில் பரவும் புதிய வகை உருமாறிய கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பெரும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. இந்த உருமாறிய வைரஸ் பழைய கொரோனா வைரசை விட மிகவும் வேகமாக பரவுவது ஆய்வில் தெரியவந்துள்ளது. இதனால் அந்த நாட்டுடனான விமான போக்குவரத்தை இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் தற்காலிகமாக தடை செய்துள்ளன. இந்தியாவில் டிசம்பர் 31ம் தேதி வரை விமான போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

சமீபத்தில் பிரிட்டனில் இருந்து இந்தியா




வந்தவர்கள், பிரிட்டனில் இருந்து வேறு நாடுகள் வழியாக இந்தியா வந்தவர்களுக்கு கொரோனா பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. இதில் இந்தியா, இத்தாலி, பிரான்ஸ், சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா உள்ளிட்ட பல நாடுகளுக்கு உருமாறிய கொரோனா வைரஸ் பரவியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில், பிரிட்டன் நாட்டுடனான விமான போக்குவரத்து தடை, ஜனவரி 7ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்தகவலை விமான போக்குவரத்து துறை மந்திரி ஹர்தீப் சிங் புரி தெரிவித்தார்.

பிரிட்டனில் இருந்து இந்தியா வந்தவர்களில் 100க்கும் மேற்பட்டோருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் இதுவரை 20 பேருக்கு புதிய வகை உருமாறிய கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கிறது. மற்றவர்களுடைய மாதிரிகளின் ஆய்வு முடிவுகளும் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சென்னையில் புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு கட்டுப்பாடுகள்

மத்திய அரசின் அறிவுறுத்தலைத் தொடர்ந்து சென்னையில் புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது.

புத்தாண்டு கொண்டாட்டங்களின் போது கூட்டம் சேர்வதை கட்டுப்படுத்த வேண்டும் என மாநில அரசுகளுக்கு மத்திய சுகாதாரத்துறை செயலாளர் கடிதம் எழுதி உள்ளார். அதில், உருமாறிய கொரோனா பரவ அதிக வாய்ப்புள்ள அனைத்து நிகழ்வுகளையும் உன்னிப்பாக கவனிக்க வேண்டும், டிசம்பர் 31, ஜனவரி 15ம் தேதி பல்வேறு கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும் என கூறி உள்ளார். தேவைப்பட்டால் இரவு நேர ஊரடங்கை அமல்படுத்தலாம் என்றும் அறிவுறுத்தி உள்ளார்.

இதனையடுத்து, சென்னையில் புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. நட்சத்திர ஹோட்டல், கேளிக்கை விடுதிகளில் உள்ள பார்களை இரவு 10 மணிக்கு மூட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. சென்னை கடற்கரை சாலையில் முற்றிலும் போக்குவரத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. சென்னையில் அனைத்து மேம்பாலங்களும் நள்ளிரவில் மூடப்படும். நட்சத்திர ஹோட்டல், கேளிக்கை விடுதிகளில் தடையை மீறி கொண்டாட்டத்தில் ஈடுபட்டால், கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என சென்னை காவல்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற

# கனகாம்பிகை

## தங்கநகை அடகுமாடம்

## KANAGAAMBIKAI

PAWN BROKERS





**25 வருடங்கள்**

## உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய

ஒரே கூரையின் கீழ்

# கனகாம்பிகை

## பவுண் வங்கி

**தங்கம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...**

2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2

# 416 269 7198

# கொரோனாக் கிருமிகள் உலகெங்கும் கொட்டிக் கிடக்கையில் எப்படி வரும் ஆண்டை மகிழ்ச்சியுடன் வரவேற்பது?

இன்று 31 ஆம் திகதியுடன் 2020 ஆம் ஆண்டு நிறைவடைகின்றது. மனித சமூகம் தன் வரலாற்றில் மறக்க முடியாதபடியாக தடம் பதித்து விட்டது இந்த ஆண்டு. இந்த ஆண்டு வரலாற்றில் இடம்பிடிப்பதற்கு காரணமாக அமைந்திருப்பது கொவிட்19 தொற்று ஆகும். உலகின் வல்லரசாக வரத்துடித்துக் கொண்டிருந்த சீனாவில் ஆரம்பித்து அங்கு முதன் முதலில் ஆரம்பித்த இந்த கொடிய வைரஸ், குறுகிய காலப் பகுதிக்குள் உலகம் முழுவதும் பரவிய பேரவலம் வரலாற்றில் இப்போதுதான் நாம் அறிந்ததாகும். சீனாவின் வுஹான் நகரில் தோற்றம் பெற்றது தொடக்கம் ஒரு வருட காலப் பகுதிக்குள் உலகம் முழுவதும் 08 கோடிக்கு மேற்பட்டோரைப் பாதித்ததோடு 17 இலட்சத்துக்கும் மேற்பட்டோரின் உயிரிழப்புக்கும் இத்தொற்று காரணமாக அமைந்திருக்கின்றது. தொற்றினால் பீடிக்கப்பட்டவர்களில் 41 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் ஒரு கோடியைத் தாண்டவுள்ளார்கள். இலங்கையில் 200 பேரின் மரணத்துக்கும் இத்தொற்று காரணாக அமைந்திருக்கின்றது. அதேநேரம் இத்தொற்றின் தன்மை, இயல்பு காரணமாக உலகமே நிலைகுலைந்து போயுள்ளது. பொருளாதாரத் துறை உள்ளிட்ட அனைத்து துறைகளும் பாதிப்புக்களுக்கும் தாக்கங்களுக்கும் உள்ளாகியுள்ளன.

இவை மாத்திரமல்லாமல், மனிதனின் சுதந்திர நடமாட்டங்களும் செயற்பாடுகளும் பெரும் சவாலுக்கு உள்ளாகியுள்ளன. வாழ்க்கை முறையிலும் பெரும் மாற்றங்கள் ஏற்படக் காரணமாக அமைந்திருக்கின்றது இவ்வரைஸ். இவ்வாறு பல்வேறு விதமான பாதிப்புகளையும், தாக்கங்களையும் ஏற்படுத்தியுள்ள கொவிட்19 தொற்று 2020 ஆம் ஆண்டை உலக வரலாற்றின் கறுப்பு ஆண்டாக மாற்றி விட்டது. இருந்த போதிலும் நவீன அறிவியல் வளர்ச்சியின் பிரதிபலனாக இத்தொற்றுக்கு எதிரான தடுப்பு மருந்து ஒரு வருட காலத்திற்குள் கண்டுபிடிக்கப்பட்டு மக்கள் பாவனைக்கும் வந்துள்ளது. இதன் பயனாக இத்தொற்று தொடர்பில் மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கைகள் துளிர் விடத் தொடங்கியுள்ளன. ஆனால் தற்போது அது தொடர்பிலும் கேள்வி எழுந்துள்ளது. அதற்கு பிரித்தானியாவின் கிழக்கு பகுதியில் கொவிட் 19 தொற்றின் திரிபடைந்த தொற்று பரவத் தொடங்கி இருப்பது காரணமாக அமைந்துள்ளது. திரிபடைந்துள்ள கொவிட் 19 தொற்றின் பரவுதல் வேகமும் பாதிப்புகளும் மக்கள் மத்தியில் உருவாகிய நம்பிக்கையைப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளன.

உலகில் தோற்றம் பெற்ற வைரஸ் ஒன்று ஒரு வருட காலப் பகுதிக்குள் திரிபடைந்து தீவிரமாகப் பரவும் நிலையை அடைந்திருப்பதும் இந்த கொவிட் 19 வைரஸ் மட்டுமேயாகும். அதுவும் 2020 ஆம் ஆண்டு நிறைவடைவதற்கு முன்பே பரவ ஆரம்பித்து விட்டது. இதன் காரணத்தினால் இலங்கை உட்பட பல நாடுகள் பிரித்தானியாவுடனான விமான போக்குவரத்தை இடைநிறுத்தியுள்ளன. இந்நாட்டுக்குள் கொவிட்19 தொற்றின் திரிபடைந்துள்ள தொற்று வந்து சேர்வதைத் தடுக்கும் வகையில் விமான நிலையங்களிலும் துறைமுகங்களிலும் விே்ட ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்படி கொவிட்19 தொற்றானது இலங்கை உட்பட முழு உலகினதும் இயல்பு நிலையை பெரிதும் பாதித்துள்ளது. குறிப்பாக இத்தொற்றின் அச்சுறுத்தல் காரணமாக வழமை போன்று புத்தாண்டுக்கு ஆயத்தமாகவோ அதனை வரவேற்கவோ முடியாத நிலைக்கு மக்கள் உள்ளாகியுள்ளனர். இல்லாவிடில் இந்த நாட்கள் புதிய எவ்வளவு தூரம் குதூகலமாகக் களைகட்டி இருக்கும் என்பதை இங்கு கூறத் தேவையில்லை. மக்கள் மத்தியில் புதிய எதிர்பார்ப்புக்களும் நம்பிக்கைகளும் உருவாகி இருக்கும். அவை அனைத்தையும் தவிடுபொடியாக்கி விட்டது இத்தொற்று.

இவ்வாறிருந்த போதிலும், கொவிட் 19 தொற்று தொடர்பில் 2020 இல் பெற்றுக் கொண்ட அனுபவங்களை பொறுப்புணர்வோடு உச்சளவில் கைக்கொண்டு 2021 இல் அதன் பரவுதலைக் கட்டுப்படுத்தவும் துண்டிக்கவும் தொடர்ந்தும் முயற்சிப்பது மிகவும் அவசியமானது. இது வேகமாகப் பரவும் ஒரு தொற்று நோயாக இருப்பதால் அதன் பரவுதல் தொடரைத் துண்டிப்பதை இலக்காகவும் நோக்காவும் கொண்டு செயற்பட வேண்டும். இதன் நிமித்தம் சுகாதாரத் துறையினர் வழங்குகின்ற அறிவுரைகளையும் வழிகாட்டல்களையும் உச்சளவில் கவனத்தில் கொண்டு நடக்க வேண்டும். குறிப்பாக முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல், கைகழுவுதல் உள்ளிட்ட அடிப்படை சுகாதாரப் பழக்கவழக்கங்களை பேணிக் கொள்ள வேண்டும். அப்போது இத்தொற்றின் பரவுதல் முற்றுப் பெறும் காலம் வெகு தொலைவில் இராது. அது புதிய நம்பிக்கைக்கும் எதிர்பார்ப்புக்கும் வழிவகுக்கும். ஆகவே கொவிட் 19 தொற்றின் பரவுதல் தொடரைத் துண்டிப்பதற்கான திடசங்கற்பதுடன் 2021 இல் பிரவேசிக்க உலகெங்கும் வாழும் ஒவ்வொருவரும் உறுதி பூண வேண்டும். அது நாடும் மக்களும் சுபீட்சம், மறுமலர்ச்சி பெற்றுக் கொள்ள அடித்தளமாக அமையும்.

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டத்திற்கு தனது தொடர்ச்சியான ஆதரவைத் தருவேன் என்கிறார் இரா சாணக்கியன் எம்.பி



தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலை மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதியை பெற்றுக்கொள்ள தமிழர்களாகிய நாம் அனைவரும் முன்னிற்க வேண்டும். இந்த வகையில், சுயாதீன விசாரணை மேற்கொள்ளும் போதே எமக்கு நீதிகிடைப்பது சாத்தியமாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்திற்கு அனுப்பி வைத்துள்ள கடித்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த கடிதத்தில் இரா.சாணக்கியன் மேலும் கூறியுள்ளதாவது, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டத்தை முன்னின்று நடாத்திய காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தாய்மாரில் 71 இற்கும் அதிகமானவர்கள் இறந்து போய் உள்ளதை ஆவணப்படுத்தி கையளிக்கும், வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் ஏற்பாட்டில் நடைபெறும் கையேட்டு நிகழ்வில் தவிர்க்க முடியாத காரணத்தினால் என்னால் பங்கு பெற முடியாமையினை நினைத்து மிகவும் மனம் வருந்துகின்றேன். இருப்பினும் இனி வருகின்ற காலங்களில் ஒரு இளைஞன் என்ற வகையில் பல வருடங்கள் கடந்தாலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியினைப் பெற்றுக்கொடுக்கும் வரையில் நான் தளர்வடைய மாட்டேன் என்பதை உறுதியாக கூறுகின்றேன். இப்போராட்டத்தினை நீதி கிடைக்கும் வரையில் எக்காலகட்டத்திலும் கைவிடாது முன்கொண்டு செல்வேன் என உறுதியாக கூறுகின்றேன்.

எமது நாட்டில் எமக்குரிய நீதி கிடைப்பதென்பது சந்தேகமே. ஆகையினால் எமது போராட்டங்களை சர்வதேச பார்வைக்கு கொண்டுவருவது எமது தலையாய கடமையாகும்.எமது பிரச்சினைகள் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டுக்கு கொண்டுவரப்பட வேண்டும். தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலை மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதியை பெற்றுக்கொள்ள தமிழர்களாகிய நாம் அனைவரும் முன்னிற்க வேண்டும். சர்வதேச சுயாதீன விசாரணை மேற்கொள்ளப்படும்போதே எமக்கு நீதிகிடைப்பது சாத்தியமாகும். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் எங்கு எவ்வாறு இருக்கின்றார்கள் என்பது இன்றும் புரியாத புதிராகவே உள்ளது. இதற்கு தற்போதைய அரசு பதிலளிக்க வேண்டும் என அந்த கடிதத்தில் இரா.சாணக்கியன் குறிப்பிட்டுள்ளார்.




# ஆங்கிலப் புத்தாண்டு எப்படி வந்தது?

## சுவாரசிய வரலாறு

உலகம் முழுவதும் பெரும்பான்மையான மக்களால் கொண்டாடப்படும் தினம் ஆங்கிலப் புத்தாண்டு. இந்த நாளை மத, இன, மொழி வேறுபாடில்லாமல் மக்கள் சிறப்பாக வரவேற்று மகிழ்கின்றனர்.

உலகத்திலேயே நியூசிலாந்து நாட்டின் சமோவா பகுதியில்தான் முதன்முதலில் ஆங்கிலப் புத்தாண்டு பிறக்கிறது. இலங்கை நேரப்படி, டிச. 31-ம் தேதி மாலை 4.30 மணிக்கு அங்கே புத்தாண்டு பிறந்துவிடுகிறது. அடுத்தபடியாக ஆஸ்தி ரேலியாவில் மாலை 6.30 மணியளவில் ஆங்கிலப் புத்தாண்டு கொண்டாட ப்படுகிறது.

பட்டாசுகளை வெடித்தும் வான வேடிக்கைகளை நிகழ்த்தியும் மக்கள் புத்தாண்டை வரவேற்கின்றனர். இனிப்புகளைப் பரிமாறியும் பூக்களை வழங்கியும் புத்தாண்டு தருணங்கள் நினைவில் இருத்தப்படுகின்றன.

உலகெங்கும் ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 1-ம் தேதி ஆங்கிலப் புத்தாண்டாகக் கொண்டாடப்படுகிறது. இதற்குப் பின்னால் ஒரு சுவாரசிய வரலாறு இருக்கிறது.

புத்தாண்டு ஆயிரக்கணக்கான ஆண்டு களாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. எனினும் அப்போது ஜனவரி 1-ம் தேதி புத்தாண்டாகக் கொண்டாடப்படவில்லை. அந்தக் காலகட்டத்தில் ரோமானிய காலண்டரில் 10 மாதங்கள் மட்டுமே இருந்தன. மார்ஷியஸ் நினைவாகப் பெயர் சூட்டப்பட்ட மார்ச் மாதம் முதல் மாதமாக இருந்தது. அதனால் மார்ச்சில்தான் புத்தாண்டு கொண்டாடப்பட்டது.

அதைத் தொடர்ந்து ரோமானிய மன்னரான போம்பிலியஸ் இரண்டு மாதங்களைச் சேர்த்து மொத்தம் 12 மாதங்களாக்கினார். ஜனஸ் என்னும் ரோமானியக் கடவுளின் நினைவாக ஜனவரியஸ், பிப்ரவரியஸ் மாதங்கள் சேர்க்கப்பட்டன.

### ஜூலியன் காலண்டர்

புகழ்பெற்ற மன்னரான ஜூலியஸ் சீசர், ஜூலியன் காலண்டரை உருவாக்கினார். அதில்தான் ஜனவரி 1 ஆங்கிலப் புத்தாண்டாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. அது உலகம் முழுவதும் பெரும்பாலானோர் பின்பற்றும் கிரிகோரியன் காலண்டரை ஒத்திருந்தது. கடவுள் ஜனஸைக் கௌரவிக்கும் விதமாக ரோமானியர்கள் அம்மாதத்தின் முதல் நாளைப் புத்தாண்டாகக் கொண்டாட ஆரம்பித்தனர். புத்தாடை உடுத்தி மகிழ்ந்தனர். பரிசுகளைப் பரிமாறிக் கொண்டனர்.

எனினும் யேசு கிறிஸ்து பிறந்த டிசம்பர் 25-ம் தேதியையே (கிறிஸ்துமஸ்) புத்தாண்டாகக் கொண்டாட வேண்டுமென இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளில் எதிர்ப்புக் குரல்கள் எழுந்தன. அந்நாட்டு மக்கள் டிசம்பர் 25-ம் தேதியைக் கொண்டாடத் தொடங்கினர்.

### கிரிகோரியன் காலண்டர்

குழப்பம் நீடித்த நிலையில் கடைசியாக கி.பி. 1500-களில் போப் கிரிகோரி என்பவர், லீப் ஆண்டை உருவாக்கி புதிய காலண்டரை உருவாக்கினார். இதைத்தொடர்ந்து கிரிகோரியன் காலண்டர் நடைமுறைக்கு வந்தது. இதைத்தான் இன்று நாம் பின்பற்றி, புத்தாண்டைக் கொண்டாடி வருகிறோம்.

### புத்தாண்டு சபதம்

இது இன்றோ, நேற்றோ தொடங்கியதில்லை. புத்தாண்டு சபதம் மேற்கொள்வது ஆதிகாலத்தில் இருந்தே வழக்கமாக இருந்திருக்கிறது. பாபிலோனியர்கள் புத்தாண்டில் பழைய கடன்களை அடைப்போம் என்றும் கடன் வாங்கிய பொருட்களைத் திருப்பித் தருவோம் என்றும் உறுதி பூண்டனர்.

நாமும் எத்தனையோ சபதங்களை ஏற்றிருப்போம், சில நாட்கள் முயற்சித்து கைவிட்டும் இருப்போம். இந்தப் புத்தாண்டில் இருந்தாவது எடுத்த சபதத்தை நிறைவேற்றுவோம். முடியவில்லையா? எந்த சபதமும் செய்ய மாட்டேன் என்றாவது சபதம் எடுப்போம்.

அனைவருக்கும் இனிய ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துகள்!

VJ-Colombo

# இவ்வார ராசிபலன்

## 01-01-2021 வெள்ளி தொடக்கம் 07-01-2021 வியாழன் வரையும்

**மேஷம்:** அற்புதமான ஆதாயமும் நிச்சயமான நிதியும் பக்குவமாக சேரக்கூடிய வாரம். புது முயற்சிகள் பலன் அளிக்கும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். ஏற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். பாலிய நண்பர் சந்திப்பு கிட்டும். பொருளாதாரம் மேம்படும். பேச்சில் கவனம் தேவை. கடன் பாக்கிகள் வசூலாகும். வாகன யோகமுண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகாரம் குவியும். சகோதர வழியில் கவனம் தேவை.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ ராஜவிநாயகர், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S

**ரிஷபம்:** ஆனந்தமும், ஆதாயமும் அமைதியும் மிகுதியாகக் கூடிய அற்புதமான வாரம். கடன் சுமை குறையும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பணநடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். அணிமணிகள் சேரும். பெண்களுக்கு யோகம் கூடும். பணப்புழக்கம் சரளமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: நந்தாதேவி, அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K

**மிதுனம்:** சவாலான விஷயங்களை சமாளித்து சாதனை நிகழ்த்தக்கூடிய போதனையான வாரம். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். தென்றல் வீசும். எதிர்ப்புகள் விலகும். நோய் அகலும். பெயர், புகழ், கௌரவம், செல்வாக்கு உயரும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: புட்டுச் சொக்கநாதர், அதிர்ஷ்ட எண்: 5,1,5,0
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J

**கடகம்:** பழக்கமான நண்பர்களால் கலக்கமான சூழ்நிலைகள் விலகும் வாரம். பழைய பகை மாறும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பிள்ளைகளால் பெருமை கூடும்.புது முயற்சிகள் தள்ளி வைக்கவும். தனவரவுகள் தடைப்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். உற்சாகம் அதிகரிக்கும். திடீர் செலவு ஏற்படும். மங்கல செய்தியால் மனம் மகிழும்.
வழிபட வேண்டிய தெய்வம்: வெக்காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,3,2,7
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,R

**சிம்மம்:** இல்வாழ்க்கை நல்வாழ்க்கையாய் அமையக் கூடிய நல்ல வாரம். ஆடம்பர செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வயிற்று உபாதை வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிவிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். ஆனந்தம் குடிக்கொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பேச்சில் கனிவு தேவை. களவுப் போன பொருள் திரும்ப கிடைக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: திருமலைராயர், அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V

**கன்னி:** நாற்காலிக் கனவுகள் நனவாகக் கூடிய நல்ல வாரம். இடமாற்றம் நன்மைத் தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். உத்தியோக உயர்வு கிட்டும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உடன் பிறப்புகளால் உதவி கிட்டும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். மேன்மையான நாள். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆதி விநாயகர், அதிர்ஷ்ட எண்: 7,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,F

**துலாம்:** பரபரப்பே இல்லாமல் பணவரவு பெருகக்கூடிய பக்குவமான வாரம். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உற்சாகம் கலை கட்டும். உறவினர் வருகை உண்டு. ஆறுதலான சூழ்நிலை அமையும். பணியில் உயர்வு கிட்டும். கட்டகாலம் மறையும். பணிவும், துணிவும் கூடும். விவேகமான வாரம். வெளியூர் பயணம் வெற்றி தரும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஹரிஹராசுதன், அதிர்ஷ்ட எண்: 9,7,1,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q

**விருச்சிகம்:** உழைப்பால் மதிப்பும் உங்களால் சிறப்பும் சேரக்கூடிய பொறுப்பான வாரம். வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். தொட்டது துலங்கும் நாள். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சக்தி பாலகன், அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M

**தனுசு:** இதயத்தில் உற்சாகமும், இல்லத்தில் சந்தோஷமும் இனிமையாய் மலரக்கூடிய அற்புதமான வாரம். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் களவுப்போகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சந்தான லட்சுமி கணபதி, அதிர்ஷ்ட எண்: 4,1,7,8
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,J

**மகரம்:** கைமேல் காசும், கௌரவ வாய்ப்பும் கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். எலக்ட்ரிக்கல் தொழில் லாபம் தரும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பெயர், புகழ் கௌரவம் செல்வாக்கு உயரும். பொதுப் பணிகளில் ஆர்வம் ஏற்படும். திருமணத் தடைகள் நீங்கும். புதுத் தொழிலை துவங்கும் வாய்ப்பு உள்ளது. வெளியூர் பயணம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். எண்ணிய காரியம் கை கூடும். புண்ணியஸ்தலம் செல்வீர்கள்.
வழிபட வேண்டிய தெய்வம்: மணக்குழ பகவதி அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,4,0,7
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,R

**கும்பம்:** ஆதாயம் மிகுதியாகி ஆதாரம் வலுவடையக் கூடிய அற்புதமான வாரம். இனிப்பான செய்திகள் வரும். பழிச் சொல்லிலிருந்து விடுபடுவீர்கள். சொத்துப் பிரச்சனைகள் தீரும். பணியாட்களால் தொல்லை மாறும். கல்வியில் மந்த நிலை மாறும். ஜவுளித் தொழில் உயர்வு தரும். கலைத்தொழில் திருப்பம் வரும். அலுவலகங்களில் பாராட்டு குவியும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவரின் தொல்லைக் குறையும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: தாய்முகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 1,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U

**மீனம்:** பிரியமானவர்களையும், பிரபல்யமானவர்களையும் சந்திக்கக் கூடிய சந்தோசமான வாரம். மனம் மகிழும் நாள். உழைப்பிற்கான பலனை பெறுவீர்கள். திறமைகள் அதிகமாகும். இன்னல்கள் அகலும். கடன் தீரும். ஆக்கம் அதிகரிக்கும். பழைய பாக்கி வசூலாகும். வியாபாரத்தில் கவனம் தேவை. தனவரவில் தடங்கல் உண்டு. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். பழைய நட்பு பலன் தரும். உறவினரால் பாதகம் உண்டு. உடல் நலனில் அக்கறை தேவை. உலோகத் தொழில் உயர்வு தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சிங்கப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377

உங்கள் பணத்தேவைகளுக்கு
குறைந்த வட்டிவீதத்தில் அடைவு பிடிக்கப்படும்

PAWN BROKERING
பழைய பவுண்கள் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளப்படும்
Cash Point
துரித பணமாற்றுச்சேவை
வெளிநாட்டு நாணயங்கள்
வாங்கவும் விற்கவும்.

Cash Point
3852 FINCH AVENUE EAST,. UNIT G30,
SCARBOROUGH, ON, M1T 3T9
TEL: 416-284-7000

- மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்

# #28 சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

"காதல் மன்னன்" ஜெமினி கணேசன் அவர்களது 100வது பிறந்த நாள் நூற்றாண்டு நினைவாக நடிகர் திலகமும் காதல் மன்னனும் இணைந்து நடித்த படங்களையும் அவர்கள் இருவருக்குமான நட்புணர்வு பற்றியும் மலரும் நினைவுக-ளாக இவ்வார கட்டுரை அமைகிறது.

சேர - சோழ - பாண்டிய மூவேந்தர்கள் போல் தமிழ் சினிமா உலகில் கோலோச்சியவர்கள் "மக்கள் திலகம்" எம்ஜிஆர், "நடிகர் திலகம்" சிவாஜி கணே-சன், "காதல் மன்னன்" ஜெமினி கணே'ன் ஆகிய மூவரும் என்பது வரலாறு. மூவரி-னதும் திரையுலக ஆட்சி கால் நூற்றாண்டு கடந்து நிலைத்து நீடித்தது. எம்ஜிஆர், சிவாஜி இருவரையும் விட கல்வியறிவு பெற்ற பட்டதாரி, கல்லூரி விரிவுரையாளர், தினமும் அதிகம் வாசிப்பவர், சிறந்த விளையாட்டு வீரர், வலிந்து கட்டி தன்னை பிரபயல்யமாக்காமல் எல்லா மட்டத்திலும் அறியப்பட்ட சிறந்த இந்திய குடிமகன். இந்தியாவின் (தமிழகத்தின்) முதல் பெண் வைத்தியராக பட்டம்பெற்ற அம்மையார் முத்துலட்சுமி ரெட்டி இவருக்கு அத்தையாவார். தமிழக சட்டசபையின் முதல் பெண் உறுப்பினராக இருந்த காலத்தில் தேவதாசி முறையை ஒழிக்க போராடி வெற்றி கண்டவர். ஜெமினி அவர்களும் டாக்டர் ஆக வேண்டும் என்று விரும்பியவர். அது நிறைவேறாதபோது விமானப் படை வீரராக முயற்சி செய்தவர். இறுதியில் விரும்பியவாறு சினிமாவிலேயே டாக்டராகவும், விமானம் ஓட்டும் வீரராகவும் தன் ஆசையை நிறைவேற்றிக் கொண்ட அழகிய தமிழ் மகன் ஜெமினி கணேஷன், முதன்முதலில் சிவாஜி அவர்களுடன் இயக்குனர் பி.புல்லையா இயக்கத்தில் 1956 இல் வெளிவந்த பெண்ணின்பெருமை படத்தில் இணைந்து நடித்தார். இப்படத்தில் சிவாஜி அவர்கள் ஜெமினி அவர்களின் தம்பியாக எதிர்மறை பாத்திரம் அதாவது வில்லன் வேடமேற்றிருந்தார்.தகப்பனாக வரும் நாகையா அவர்களின் இரண்டாம் தாரத்தின் மகன் சிவாஜி முதல் தாரத்தின் மகன் ஜெமினி. ஜெமினி அவர்கள் படிப்பறிவற்ற அப்பாவி - வெகுளியாகவும், அவரை இம்சைப்படுத்தும் தம்பியாக சிவாஜியும் நடித்திருப்பார்கள். "பெண்ணின் பெருமை"யை நிலைநிறுத்தவும் தம்பி சிவாஜியின் அடாவடித்தனங்களுக்குப் பாடம் புகட்டும் அண்ணியாகத் திருமதி சாவித்திரி நடித்த அருமையான குடும்ப சித்திரம்.

வேடிக்கை என்னவென்றால் மரியாதைக்குரிய ஜெமினி கணேஷன் ஜெமினி நிறுவனத்தில் பணிபுரியும் போது "ஜெமினி" எனும் நிறுவனப் பெயரை கணே-சனுடன் ஒட்டிக்கொண்டது) சிவாஜி, சௌகார் ஜானகி போன்றோர் வாய்ப்பு தேடி செல்லும் போது அவர்களைப் பற்றிய நேர்முக குறிப்புகளைப் பதிவு செய்து அதிபர் வாசனுக்கு அனுப்ப வேண்டும். இவ்வாறு சிவாஜி அவர்களைப் பற்றி "பேசும் கண்கள் உடைய இவர் எதிர்காலத்தில் பிரகாசிப்பார்" என பதிவு செய்தார். அவரது பதிவு பொய்க்கவில்லை. 1952ல் வெளியான "பராசக்தி" மூலம் சிவாஜி அவர்கள் பிரகாசிக்கத் தொடங்கிவிட்டார். நான்கு ஆண்டுகள் கழித்து ஜெமினி (1956) அவர்களும் முதன்முதலாக "பெண்ணின்பெருமை" மூலம் சிவாஜியுடன் இணைந்து பிரகாசிக்கத் தொடங்கி, பின்னாளில் இயக்குநர் பீம்சிங்கின் "ப" வரிசைப் படங்களில் சிவாஜியும் ,ஜெமினியும் சக்கை போடு போட்டனர்.



ஒரு கதாநாயகன் இன்னொரு நாயகனுடன் இணைவதா என எந்தவித ஈகோவும் இல்லாமல், இரு நாயகர்களும் தம் தி-றமையை ஏற்றுக்கொண்ட பாத்திரங்களுக்கூடாக நிரூபித்து தக்கவைத்துக் கொண்டனர். நல்ல சினிமா படங்கள் தயாராவதற்கு இத்தகைய கலைஞர்களின் பங்கு அவசியமானதும் அபரிமிதமானதாகும்!

இவ்வகையில் சிவாஜியுடன் ஒரே படத்தில் இணைந்து நடித்த நாயகர்கள் வரிசையில் ஜெமினி, எஸ்எஸ் ராஜேந்திரன், முத்துராமன், ஏவிஎம் ராஜன், எஸ்.வி. சுப்பையா, (மங்கையர்திலகம், இரும்புத்திரை) பாலாஜி, போன்றோர் தன்னம்பிக்கையும் - திறமையும் நிரம்பப்பெற்ற கலைஞர்களாகும். பின்னாளில் கமலஹாசன், ரஜினிகாந்த், சத்யராஜ், ஜெய்சங்கர், ஆகியோரும் சிவாஜியுடன் இணைந்தார்கள். விஜயகுமார் சிவகுமார் பிரபு கார்த்திக் ரவிச்சந்திரன் விஜயகாந்த் முரளி விஜய் அர்ஜுன் என தலைமுறை நடிகர்களுடன் இணைந்து நடித்து அவர்களை பெருமைப் படுத்தியவர் நடிகர்திலகமேயாகும்!. நடிகர் திலகத்திற்கு வசனகர்த்தா ஆரூர்தாஸ் அவர்களை அறிமுகம் செய்து வைத்து, "பாசமலர்" தொடக்கம் சிவாஜியின் பல படங்களுக்கு வசனம் எழுத ஆரம்பித்து வைத்தவர் ஜெமினி கணேசன் அவர்களேயாகும். தொடர்ந்து "பாவமன்னிப்பு" "பந்தபாசம்" "பார்த்தால் பசிதீரும்" "உனக்காக நான்" "கப்பலோட்டிய தமிழன்" மற்றும் "சரஸ்வதி சபதம்" "கந்தன் கருணை" போன்ற படங்களில் மட்டுமல்லாது நடிகர் திலகத்தின் இலட்சிய படமான வீரபாண்டிய கட்டபொம்மன் படத்தில் தளபதி வெள்ளையத்தேவனாக நடித்துக்கு உதவிக்கரம் நீட்டிய அருமை நண்பர் ஜெமினி அவர்களாகும். முதலில் வீரபாண்டிய கட்டபொம்மனில் வெள்ளையத்தேவனாக லட்சிய நடிகர் எஸ்எஸ் ஆர் அவர்களைத்தான் தீர்மானித்து இருந்தார்கள். ஆனால் அச்சமயத்தில் கவியரசு கண்ணதாசனின் "சிவகங்கைச்சீமை" யில் கதாநாயகனாக நடிக்க ஒப்பந்தமாகி விட்டார் எஸ்எஸ் ராஜேந்திரன்.

இரு படங்களும் வெள்ளையரை எதிர்த்துப் போராடும் விடுதலை காவியங்கள். சிவாஜி அவர்களின் நெருக்கடி நிலைமையைப் போக்க அவர் நாடிய இடம் திருமதி சாவித்திரி அவர்களிடமேயாகும்!

"நடிகையர் திலகம்" சிவாஜியின் உடன்பிறவா சகோதரி. அந்நேரத்தில் சாவித்திரி அவர்கள் கர்ப்பமடைந்திருந்தார். இக்காலத்தில் ஜெமினி படங்களில் ஒப்பந்தம் ஆவதை தவிர்த்து வந்தார். சிவாஜி அண்ணாவின் கோரிக்கையை தட்டமுடியாத விரும்பாத சாவித்திரி அவர்களே கணவர் ஜெமினியிடம் பேசி "வெள்ளையத்தேவனாக" பங்கேற்க வைத்தார். சிவாஜி, ஜெமினி, சாவித்திரி மூவருக்குமிடையேயுள்ள நட்புணர்வு அலாதியானது.

சிவாஜி அவர்களை "என்ன பிரதர்" என்று அன்புடன் அழைப்பார் ஜெமினி. பதிலுக்கு "மாப்பிள்ளை" என்று சிவாஜி அழைப்பார். இருவரும் அமரராகிவிட்டார்கள். "மக்கள் திலகம்" அவர்களது 100 வ்து பிறந்தநாள் விழாவைக் கொண்டாடியது போல் "காதல் மன்னன்" அவர்களையும் கொண்டாடி மகிழ்வதற்கும் - பெருமைப்படுத்துவதற்கும் "கொரானா" தடையாகிவிட்டது.

எனது ஆயுள் கெட்டியானால் "நடிகர் திலகம்" 100 விழாக் கொண்டாடும் வேளை மாப்பிள்ளை ஜெமினி கணேசன் அவர்களையும் கௌரவம் செய்வேன்.

ஜெமினி அவர்கள் தேன் நிறைந்த மதுக்குடம். இந்த மதுக்குடத்தில் வந்து விழுந்த மலர்கள் சபிக்கப்படாதவர்கள். ஜென்ம சாபல்யம் பெற்றவர்களாகிவிட்டார்கள். யாரும் கல்லாய் போவாய் என சாபத்திற்காலான அகலிகைகள் அல்ல!

இந்திரனும் மன்மதனும் பெருமைப்படவேண்டிய புதுக்கோட்டை அறிமுகம் செய்த "வஞ்சிக்கோட்டை வாலிபன்"!. வஞ்சியரின் கனவுலகக காதலன். அதனால் இவரே "காதல் மன்னன்" பூத்துக்குலுங்கும் செடியில் மலரைப் பறித்து கசக்கி முகறாமல் - மலருக்கே வலிக்காமல் முத்தமிடும் வித்தை அறிந்த வாத்ஜாயனர் நமது ஜெமினி கணேசன் அவர்களாகும்.

"சாந்தா! ஏன் பாட்டை நிறுத்திவிட்டாய்! உன் இசையென்ற இன்ப வெள்ளத்தில் நீந்துவதற்கு ஓடோடி வந்த என்னை ஏமாற்றாதே! சாந்தா... பாடு...!
"என் இசை உங்கள் நாதஸ்வரத்தோடு..."
"தேனோடு கலந்த தெள்ளமுது... கோல நிலவோடு கலந்த குளிர்த்தென்றல். ம்.. பாடு சாந்தா பாடு..!

இந்த சிங்காரவேலன் சன்னிதியில் நம் சங்கீத அறிவு ஒன்று கலக்கட்டும்" என கொஞ்சும் குரலில் அவர் குலாவுவதை "கொஞ்சும் சலங்கையில் கவிஞர் கு. மா பாலசுப்பிரமணியன் எழுதிய பாடலுக்கு நாதஸ்வர மேதை அமரர் காருக்குறிச்சி அருணாச்சலம் "சிங்கார வேலனே தேவா..." எனக் குழலிசைக்க நாதஸ்வர இசையில் தேவன் வந்து பாடுவது போல் ஜானகி அம்மாவின் தேன் குர-லோசையும் கலந்து வரக் கண் மூடி மெய்மறந்து இரசித்தவர்களில் நானும் ஒருவன்!




இனி சிவாஜியின் கதாந-ாயகிகள் வரிசையில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத திறமை வாய்ந்த "நடிகையர் திலகம்" அவர்கள் தமிழ் திரைப்படஉலகில் என்றென்றும் பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்குமுரிய கலைஞி ஆவார். "தேன் உண்ணும் வண்டு... மாமலரைக்கண்டு திரிந்தலைந்து பாடுவதே ரீங்காரம் கொண்டு...", எனும் கவிஞர் கே பி காமாட்சியின் காதல் கீதத்தை முனுமுனுத்தபடி இசையமைப்பாளர் சலபதிராவைக் கொண்டாடவைத்த "அமர-தீபம்" நாயகிகளில் ஒருவராக சிவாஜிக்கு ஜோடியாக முதன் முதலில் இணைந்தார். பின் இருவரும் "கனவின் மாயா லோகத்திலே கலந்தே உல்லாசம் காண்போமே..." என, "அன்னையின் ஆணை"யில் கனவுலகில் மிதந்தார்கள். இப்படத்தில் தந்தை சிவாஜிக்கு பண்டரிபாயும் மகன் சிவாஜிக்கு சாவித்திரியும் ஜோடியானார்கள். சாவித்திரியின் தந்தையாக வரும் ரங்கராவ் அவர்களைப் பழிவாங்கும் ஆத்திரம் கொண்ட சிவாஜியின் வில்லத்தனமான நடிப்பையும் இப்படத்தில் ரசிக்கலாம். இதே படத்தில் "முரசொலி" மாறன் எழுதிய "சாம்ராட் அசோகன்" ஓரங்க நாடகத்தில் சிவாஜி அவர்கள் அசோகச் சக்கரவர்த்தி வேடமேற்று அனைவரையும் பிரமிக்க வைத்திருப்பார்!.

தொடர்ந்து சிவாஜி அவர்களுடன் "காத்தவராயன்" மேகலாவின் "குறவஞ்சி" (வசனம் கலைஞர் மு கருணாநிதி) "வணங்காமுடி"( இதில் சாவித்திரி இரு வேடங்களில் நடித்திருப்பார்) "வடிவுக்கு வளைகாப்பு" "எல்லாம் உனக்காக" என சிவாஜியுடன் இணைந்தாலும் அவர் "நடிகையர் திலகம்" ஆனது இயக்குனர் திலகம் கே எஸ் கோபாலகிருஷ்ணனின் "கை கொடுத்த தெய்வம்" மூலமே!

சிவாஜிகணேசனுடன் நடித்த நடிகைகளில் எவருக்குமே கிடைக்காத ஒரு வாய்ப்பு சாவித்திரிக்கு மட்டுமே கிடைத்தது. "நவராத்திரி" படத்தின் வாயிலாக! நடிகர் திலகம் இந்தப் படத்தில் நவரச பாத்திரங்களில் நடித்த போது அந்த ஒன்பது கதாபாத்திரங்களுக்கும் ஈடுகொடுக்கும் வகையில் சாவித்திரி அவர்களும் நவரச நடிப்பை வெளிப்படுத்தி நானும் ஒரு நவரச நாயகி என்பதை நிரூபித்துக் காட்டி இந்திய திரை உலகை மெய்மறக்க வைத்தார்.

திருமதி சாவித்திரி அவர்கள் சொந்தத்தில் "பிராப்தம்" படத்தை தயாரித்தபோது அதில் தன் விருப்பப்படி சிவாஜியையே நடிக்க வைத்தார். இப்படத்திலிருந்தே அவரது பிராப்தம் வாழ்க்கையில் வேறு திசைக்கு அழைத்துச் சென்றது சோகமான வரலாறு. "திருவிளையாடல்" படத்தில் சிவாஜியும் சாவித்திரியும் தோன்றினார்கள். முருகனுக்கு சிவனின் திருவருளை சொல்லும் பாங்கும், மீனவப் பெண்ணாக தாட்சாயினியாகவும் வேடமேற்று இப்படத்தை பெருமைப் படுத்தியிருப்பார்! திருமதி சாவித்திரிக்கு மைல்கல்லாக அமைந்த "பாசமலர்" சகோதரி ராதா கதாபாத்திரமேயாகும். அண்ணன் தங்கை உறவுக்கு விரைவிலக்கணம் எழுதிய "பாசமலர்" உடன்பிறப்புகளாகவே சிவாஜி சாவித்திரி நிஜ வாழ்க்கையிலும் பழகி வந்தார்கள். இருவரது பங்களிப்பும் தமிழ் சினிமாவில் காலத்திற்கும் பேசப்படும்.

அடுத்த இதழில்...

சந்தோசத்தை விலை கொடுத்து வாங்கினால் அது விபச்சாரம்! கட்டாயப்படுத்தி எடுத்துகிட்டா கற்பழிப்பு! பரிசாகக் கொடுத்தால்.. எந்த படத்தில் இக் காட்சி இடம்பெறுகிறது! இக்காட்சியில் நடிகர் திலகம் காட்டிய உணர்ச்சிக் கொந்தளிப்பு, எரிமலையின் சீற்றம்!

காத்திருங்கள்..!

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி,
நீரிழிவு நோய், வயிற்றுவலி,
மாதவிடாய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 927



## ஆலடி விநாயகர் ஆலயம் திருகோணமலை

விநாயகப்பெருமானின் சிறப்பு. புகழ், அருள், பகைவர்களை வென்று மக்களைத் துன்பத்திலிருந்து மீட்டமை போன்ற பல்வேறு கருத்துக்களை உள்ளடக்கியதாக விநாயகர் தொடர்பான புராணக் கதைகள் காணப்படுகின்றன. புராணக் கதைகள் வெறும் கற்பனைகளை அடிப்படையாகக் கொண்டவை என்ற கருத்து தவறானது. புராணம் என்றால் புராதனம், பழமை என்ற கருத்தினை விளக்கும். இவ்வாறான புராணக் கதைகளும் பல்வேறு தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டவையாகக் காணப்படுகின்றன.

இந்துசமயத்திலே காணப்படுகின்ற ஒவ்வொரு தெய்வத்திற்கும் அத்தெய்வங்களோடு தொடர்புடைய புராணக் கதைகள் பல காணப்படுகின்றன. இவற்றிலே காணப்படுகின்ற கதைகளின் சாரங்களுக்கோ அல்லது சில காட்சிகளுக்கோ வடிவம் கொடுத்து அவற்றைச் சுவரோவியங்களாக ஆலயங்களிலே தீட்டி பக்தர்கள் புரியும் வகையில் அவற்றைத் தெரியப்படுத்தும் பணியைப் பல ஆலயங்கள் செய்துள்ளன. இவ்வாறான பல சுவரோவியங்கள், திருகோணமலை ஆலடி விநாயகர் ஆலயத்திலும் காணப்படுகின்றன.

நல்லவர்கள் எங்கிருக்கின்றார்கள் எனத் தேடிக் கண்டுபிடித்துத் தீங்குசெய்த கஜமுகாசுரனைத் தண்டித்து, பின் மன்னித்து நன்மைசெய்யும் பேரருள் வாய்ந்தவர் விநாயகர் என கந்தர் அனுபூதியில் அருணகிரிநாத சுவாமிகள் அருளியுள்ளார். இக்கதையினை அடிப்படையாகக் கொண்ட கஜமுகன் போரினை விளக்கும் சுவரோவியமும் ஆலடிவிநாயகர் ஆலயத்திலே காணப்படுகின்றது. அத்தோடு விநாயகப்பெருமானோடு தொடர்புடைய விநாயகச்‘டி விரதம், அனந்தன் சாபநீக்கம் பற்றிய சுவரோவியங்களும் குறிப்பிடத்தக்க அழகிய சுவரோவியங்களாக விளங்குகின்றன.

இவ்வாலயத்திலே காணப்படும் திருவாசி மிக அழகுடையதாகவும் பெரியதாகவும் காணப்படுகின்றது. இத்திருவாசி பன்னிரண்டடி உயரமும், பத்தடி அகலமும் கொண்டது. இத்திருவாசி மகாமண்டபவாசலை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றது. வடகிழக்குத் திசையில் பைரவரும், நாகதம்பிரானும், பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார்கள். அத்தோடு அழகியகோபுரத்தைக் கொண்டதாகவும் இக்கோவில் காணப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்திலேயே முதன்முதல் இவ்வாலயத்திலேதான் பஞ்சமுக விநாயகர் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இத்திருவுருவம் 1980ஆம் ஆண்டு ஆவணிமாதம் 21ஆம் நாள் பிரதிஷ்டை செய்யப்பட்டு சிறப்பாகக் கும்பாபிஷேகமும் நடைபெற்றது. இத்திருவுருவம் மிகச் சிறப்பானதாகக் கருதப்படுகின்றது. இத்திருவுருவத்தின் பஞ்சமுகங்களும் பல்வேறு தத்துவங்களைக் கொண்டதாக விளங்குகின்றது. ஈசானத்திருமுகத்தை மத்தியில் மேல்நோக்கிய பாவனையில் வைத்து தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் ஆகிய நான்கு திருமுகங்களையும் நான்கு திக்கையும் நோக்கியிருக்கும்விதத்தில் இந்தப் பஞ்சமுக விநாயகர் அமைக்கப்பட்டுள்ளார். இத்திருவுருவத்திற்கு விநாயக விரதகாலத்திலே இருபத்தியொருநாளும் பஞ்சமுகார்சனை நடைபெறும்.

இவ்வாலயத்திலே திருவனந்தல், காலைச்சந்தி, உச்சிக்காலம், சாயரட்சை ஆகிய நான்குகாலப்பூசைகளும் சிறப்பாக நடைபெறும். இவ்வாலயத்தின் வருடாந்த மகோற்சவமும் சிறப்பாக நடைபெறும். சித்திரா பூரணையைத் தீர்த்த தினமாகக் கொண்டு பத்துநாட்கள் அலங்கார உற்சவம் நடைபெறும். அத்தோடு மாதசதுர்த்தி, விநாயகவிரதம், கஜமுகசூரசம்மாரம், சர்வாலயதீபம், திருவெம்பாவை, சுவர்க்கவாசல் ஏகாதசி, தைப்பூசம், முதலியவற்றோடு நித்திய, நைமித்திய வழிபாடுகள் சிறப்பாக நடைபெறும். மார்கழிமாதம் முழுவதும் திருப்பள்ளியெழுச்சிப் பூசையும், சங்காபிஷேகமும் இங்கு மிகச் சிறப்பாக நடைபெறும். சித்திராபூரணை தினத்தன்று திருகோணமலை ஆலடி விநாயகப் பெருமான் கடற்தீர்த்தம் ஆடச் செல்வார். இத்திருநாளில் பெருந்திரளான பக்தர்கள் கலந்து கடற்தீர்த்தமாடி விரதம் அனுட்டிப்பது வழக்கம்.

கணபதிபூசை கைமேற் பலன் என்று கூறுவாகள். விநாயகர் வழிபாட்டை யாவரும் எளிதாகக் கடைப்பிடிக்கமுடியும். இருகைகளாலும் தலையிலே குட்டிக் கும்பிடுதலும், இருகைகளாலும் மாற்றி இருகாதுகளையும் பிடித்தக்கொண்டு தோப்புக்கரணம் இட்டு வணங்குதலும் விநாயகர் முன் செய்யப்படும் சிறப்பு வழிபாடுகளாகத் தொன்றுதொட்டுக் கடைப்பிடிக்கப்படுகின்றன. திருகோணமலைப்பிரதேசத்திலே பல விநாயகர் ஆலயங்கள் காணப்பட்டபோதிலும் எண்ணியபொருளெலாம் எழிதில் பெறவைக்கும் விநாயகராக எழுந்தருளியிருந்து, அடியார்களுக்கு வேண்டியதை ஈந்து அருள்பாலிக்கும் தெய்வமாக திருகோணமலை ஆலடி விநாயகர் விளங்குகின்றார்.

‘ அஞ்சுள ஆனை அடவியுள் வாழ்வன
அஞ்சுக்கும் அஞ்செழுத்து அங்குச மாவன
அஞ்சையும் கூடத் தடுக்கவல் லார்கட்கே
அஞ்சதி யாதி அகம்புக லாமே’



# மீட்பர் கிறிஸ்து சபை

# Redeemer Christ Assembly – Brampton

15 Kenview Blvd., Unit 3 (Upstairs), Brampton, On. L6T 5G7

## கிறிஸ்மஸ்– Christmas

“நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார், கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும், அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்.”– ஏசாயா 9: 6

★

## புதுவருட நள்ளிரவு ஆராதனை

2020 டிசம்பர் 31ம் திகதி வியாழன் இரவு 11.00 மணிக்கு (On Zoom)
2021ம் ஆண்டின் ஆரம்பத்தை தேவ சமுகத்தில் ஆசீர்வாதத்துடன் ஆரம்பிப்போம்

“வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்,
உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது.”– சங்கீதம் 65: 11

### இயேசுவின் நாமம்

இயேசுவின் நாமம் இனிதான நாமம், இணையில்லா நாமம் இன்ப நாமம்
பாவத்தைப் போக்கும் பயமதை நீக்கும், பரம சந்தோஷம் பக்தருக்களிக்கும்
பரிமள தைலமாம் இயேசுவின் நாமம், பார் எங்கும் வாசனை வீசிடும் நாமம்
வானிலும் பூவிலும் மேலான நாமம், வானாதி வானவர் இயேசுவின் நாமம்
நேற்றும் இன்றும் என்றும் மாறிடா நாமம், நம்பினோரை என்றும் கைவிடா நாமம்
முழங்கால் யாவும் முடங்கிடும் நாமம், மூன்றில் ஒன்றாக ஜொலிப்பவர் நாமம்
சாத்தானின் சேனையை ஜெயித்திட்ட நாமம், சாபப் பிசாசை துரத்திடும் நாமம்
எல்லாம் வல்ல இயேசுவின் நாமம்

* * *

### இயேசு சொன்னார்

நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்.– யோவான் 14: 13–14

அனைவருக்கும் எமது புதுவருட வாழ்த்துக்கள்
We wish you all a Very Happy New Year 2021

மேலதிக விபரங்களுக்கும், ஜெப தேவைகளுக்கும்
பாஸ்டர் அல்பிரட் செருபிம்
647 – 271 7645

# தியானம் நம்மை மாற்றி அமைக்கின்றது!



தியானம் என்பது தீ யானம் ஆகும். தீ என்பது தீய எண்ணங்களைம் தீய பழக்கத்தையும் குறிக்கும் யானம் என்பது பாத்திரத்தைக் குறிக்கும். தியானத்தில் யானம் என்றபாதிதிரத்தில் உள்ள தீய பழக்க வழக்கங்களை அகன்று விடுகின்றன.

தியானத்தில் உட்காரும்போது. நீங்கள் செய்த பாவம்தான் முன் கூட்டிக் காட்சிகளாக வரும். உண்மைத்தியானம் என்பது கால்களிலிருந்து சிறுகச் சிறுக மரத்துக்கொண்டே வரும். இரத்த ஓட்டம் மட்டும் இலேசாக இருக்கும். லேசாக இருந்து படிப்படியாக உடம்பு முழுவதும் மரத்துக்கொண்டே வரும். தியா-னம் கலையும் போது ஒவ்வொரு பகுதியாக மெலெயிருந்து கலை-லயும் போது ஒவ்வொரு பகுதியாக மேலேயிருந்து உணர்ச்சி வந்து கொண்டிருக்க வேண்டும்.

உஷ்ணம் ! குளிா்ச்சி! உஷ்ணம் குளிர்ச்சியாவதும் குளிர்ச்சி உஷ்ணமாவதும் தான் தியானம். தியானம் என்பது நிதானத்திற்கு வழிவகுக்கும். ஓய்வு தருவது தியானம்.

நம்மை நாமே அறிந்து கொள்ளவும். நமக்குள்ளே இருக்கின்ற பரம்பொருளை அறிந்து அதனுள் லயமாகச் செய்கின்ற முயற்சிதான் தியானம். தியானம் நமக்கு எல்லாவற்றையும் தரும். இயற்யையை வெல்ல வேண்டுமா? அதுவும் தியானத்தால் முடியும். இந்தத் தயான முறையால் தான் எல்லா விஞ்ஞானப் புதமைகளும் கண்டு பிடிக்கப்படுகின்றன.

தியானம் என்பது மனத்தின் பயிற்சியினால் நிகழ்வது. எல்லாவற்றையும் பரம்பொருளில் கரைந்து போகச் செய்வது. ஒன்றில் ஒன்றை அடங்கச் செய்வது. நிலத்தை அதற்குக் காரணமாக நிரிலும், நீரைத் தீயிலும். தீயைக் காற்றிலும். காற்றை ஆகாயத்திலும், ஆகாயத்தை மனத்திலும், மனத்தை ஆன்மாவிலும் அடக்குவதால் நீயும் ஒரு ஆன்மாவாகவே ஆகிறாய். எல்லா சமயங்களிலும் தியானத்தை வற்புறத்துகின்றன.

தியானம் செய்ய முடியவில்லையே என்று கவலைப்படகினறவர். அதற்க்குக் காரணம் மனம் ஒரு நிலைப்படாததே. இது நம் பழம் பிறவிகளில் செய்த செயல்கள், எண்ணிய எண்ணங்கள் ப்பிறவியில் நமது மனதில் பதிவுகளாகப் பதிந்துள்ளன. தியானம் செய்யவும், மந்திரம் படிக்கவும் நமக்கு முதலில் ஆர்வமும், ஆசை-சயும் வரவேண்டும். அது நமக்கு இருக்கின்றதா என்று நம்மை நாமே கேட்டுப் புரிந்து கொள்ள வேண்டும். நம்முடைய பூர்வ ஜென்ம வாசனைகள், தியானம் செய்யவும், மந்திரம் படிக்கவும் விடாமல் தடைப்படுத்தும். தேவையில்லாத எண்ணங்கள் புற்றீசல் போல வெளிக்கிளம்பும். அவற்றை வேடிக்கை பார்த்தபடி அவற்றிலிருந்து நம் மனத்திலி'ருந்து இப்படிப்பட்ட எண்ணங்களா என்று எப்போது கேட்டுக்கொள்கின்றோமோ அப்போதுதான் தியானம் செய்வதற்கு ஆரம்பக் படிக்கட்டின் மேல் அடி எடுத்து வைக்கின்றோம் என்று பொருள்.

எனவே தியானம், மந்திர ஜெபம் .வற்றை ஒரு கட்டாய கடமையாக நாம் மேற்கொள்ளக்கூடிய நிலை வந்தால் நாம் நிட்சயம் புத்துணர்வு பெற்று.மன-அமைதி பெறமுடியும். குதிரையின் இஷ்டப்படி நாம் சவாரி செய்யக்கூடாது. எங்கள் விருப்பப்படி குதிரையை ஓட்டவேண்டும். அப்படியிருந்தால்தான் வெறிறி.

தியானம் கைகூட பொதிச் சுவாமிகள் போதித்த அருளுரைகள். .

பசித்தார்க்குத் தராதரம்பாராது அன்னமிடுவது.

தன்புற்றார்க்கு இன்சொல்லால் ஆறுதல் கூறுவது.

ஏழை, பணக்காரன் என்று பாராமல் அன்பு செலுத்தவது..

நல்லாரைக் காணபது

பெச்சைச் சுரக்கி நல்லார் கண்டறிந்ததைக் கேட்டத்தெறிவது.

சித்தர் சமாதிகளைத் தரிசிப்பது.

அச்சமாதிகளில் நின்று மனத்தை ஒருமைப்படுத்தி சிலகாலம் மௌனம் மேற்கொள்வது. இவையெல்லாம் செய்தால் எம் மனம் கட்டுப்பாட்டுக்குள் அடங்கும். தியானத்திற்கு முன் எதை-தயாவது ஒன்றைத் தியாகம் செய்ய வேண்டும். உயிரள்ளவை மேலுள்ள பாசம், உயிரற்றவை மேலுள்ள பற்று. நான் என்ற அகம்பவம், மண், பெண், பொன் மீதுள்ள மோகம் சுகபோகம் இவற்றில் ஏதாவது ஒன்றைத் திரிகரண சுத்தியோடு தியாகம் செய்யவேண்டும்.

தியானம் செய்யச் செய்ய மனம் அமைதி அடையும். அமைதி அடைந்தால் சிந்திக்கும் திறமை வளரும், நம்பிக்கையோடு பயிற்சிகளில் ஈடுபடுபவர்களுக்கு கண்டிப்பாக அவர்களுடைய நோக்கம் கைகூடும். எல்லாத் துன்பங்களும் நீங்கும். எல்லாக் கவலைகளும் பறந்தோடும். கா்மத்துக்கான விதை எரிந்து விடும். தியானத்தினால் அடைய முடியாதது எதுவும் இல்லை. தயானமே எல்லாம் அருளும் தன்மை உடையது.

நன்றி "சக்தி ஒளி"

## வீணாவின் கவிக்கணை

எடுத்துக்காட்டாக வாழ யாரும்
தயாராக இல்லையிங்கு,
பாராட்டி தட்டிக்கொடுக்கவும்
எவருமில்லையிங்கு
ஆனால் குத்திக்காட்டவோ
பல முகங்களுண்டு இங்கு,
விழுவதை படம் பிடிக்கும்
உலகமும் இது,
கைகொடுத்து தூக்கிவிடும்
எண்ணமில்லாதது,
சுயநலத்துடன் பூமி சுற்றுவதும்
நின்று விட்டால், தெரிந்திவிடும்
நம் நிலை என்னவென்று!


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:

வசந்தி சிவராஜா - 416-616-3077




எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# 6ம் ஆண்டு நினைவஞ்சலி

**மண்ணில்:**
**09-04-1928**

**விண்ணில்:**
**03-01-2014**



## அமரர். அற்புதம்மா சந்தியாப்பிள்ளை

யாழ். ஆனைக்கோட்டை உயரப்புலத்தைப்
பிறப்பிடமாகவும். வதிவிடமாகவும் கொண்ட
திருமதி. அற்புதம்மா சந்தியாப்பிள்ளை அவர்களின்
ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி.

*எம் மூச்சிலும், உதிரத்திலும் உரமாய் கலந்து*
*எம் உயர்வுக்காய் உனை உருக்கி உழைத்த*
*எம் குடும்பத்தின் குல விளக்கே! மங்காத*
*எம் மனங்களில் இருள் போக்கும் ஒளி விளக்கே நீ அம்மா*

*ஆழ்கடல் அலை அடிக்க மறப்பினும்*
*ஆதவன் வானில் உதிக்க தவறினும்*
*ஆலயங்களில் மணி ஓசை ஒலிக்காவிடினும்*
*அம்மா என்ற ஒலி எம்மிடத்தே என்றும் ஒலிக்குதம்மா*

*எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும்*
*எத்தனை வருடங்கள் சென்றாலும்*
*எங்கள் உள்ளத்தை விட்டு*
*என்றுமே உம் நினைவு அகலாதம்மா*

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள். மருமக்கள். பேரப்பிள்ளைகள். பூட்டப்பிள்ளைகள்
தகவல் :உதயன் (மகன்)
416-736 3760


# Carefirst Family Health Team
Family Health Team

## Accepting New Patients



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029,    www.carefirstfht.com



Life Insurance
Don't think twice
Life Insurance Group Benefits
Critical Illness RRSP / RESP
Disability
Investments
iNFORCE LIFe Financial Services Inc.
RESP
Registered Education Saving Plans
40% - 20% Goverment Grant
Plus additional 15-10% on us.
Start Saving Early
Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay: 416.704.8074

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated.
Off: 416-298-3200
Dir 647-963-0705

23rd Years in Publishing

UTHAYAN
உதயன்
திக்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
புதிய வகுப்புகள் ஆரம்பம்
October 2020
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
1646 VICTORIA PARK AVE., SUITE 1
PARK PLAZA (BETWEEN LAWRENCE & EGLINTON)
TORONTO, ON. M1R 1P7
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1291 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 1, 2021

# எதைக் கொண்டு வருகின்றாய் இனிய புத்தாண்டே?

## கனடா உதயன் வாசகர் வட்டம் நடத்திய கவியரங்கு

கனடா 'உதயன்' பத்திரிகையானது தனது 25வது வருடத்தில் காலடி எடுத்து வைக்கும் முகமாக 2021 ம் ஆண்டை எதிர்பார்த்து காத்திருக்கும் இந்த வேளையில், தனது வெள்ளி விழா ஆண்டை சிறப்பாகக் கொண்டாடும் முகமாக, அதற்கு முன்னோட்டமாக, எதைக் கொண்டு வருகின்றாய் இனிய புத்தாண்டே? என்னும் கவியரங்கத்தை , கனடா உதயன் வாசகர் வட்டம் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை 26ம் திகதி நடத்தியது. (விபரமான செய்தி உள்ளே 9ம் பக்கத்தில்)

# பத்து ஆண்டுகளை நிறைவு செய்துள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் !

2009 மே, ஈழத்தமிழர் தேசம் பெரும் இனவழிப்பொன்றின் ஊடாக சிங்கள அரச கட்டமைப்பினால் ஆக்கிமிக்கப்பட்டுள்ள நிலையில், தாயகம், தேசியம், அரசியல் இறையாண்மை எனும் ஈழத்தமிழர் தேசத்தின் அரசியல் பெருவிருப்பின் ஜனநாயக வடிவமாக திகளுகின்ற நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், தனது பத்தாவது ஆண்டினை நிறைவு செய்துள்ளது. (விபரமான செய்தி உள்ளே 7ம் பக்கத்தில்)

# நேர்மையான ஒரு தமிழ்ப் பத்திரிகையாளரின் குரலை நசுக்கிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பு

**(கொழும்பிலிருந்து ராதாகிருஸ்ணன்)**



இலங்கையில் கடந்த 30 ஆண்டுகளில் எத்தனையோ பத்திரிகையாளர்கள், கலைஞர்கள் என நூற்றுக்கணக்கான தமிழ் சிங்கள ஆங்கில மொழிப் பத்திரிகையாளர்களின் குரல்கள் பல்வேறு பிரிவினர்களால் நசுக்கப்பட்டுள்ளன. பலர் கொலைசெய்யப்பட்டுள்ளார்கள், பலர் காணாமல் ஆக்கப்பட்டவர்களாக மறைக்கப்பட்டுள்ளார்கள், அல்லது கொல்லப்பட்டுள்ளார்கள். (விபரமான செய்தி உள்ளே 12ம் பக்கத்தில்)

# யாழ்ப்பாண மாநகரசபையை கைநழுவவிட்டது தொடர்பாக மாவை சேனாதிராஜாவை கண்டிக்கும் சுமந்திரன்



நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ்ப்பாண மாநகரசபையின் மேயர் பதவிக்கான தெரிவிக் கூட்டத்தில், மேற்படி பதவியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைநழுவவிட்டது தொடர்பாக மாவை சேனாதிராஜாவை குற்றச்சாட்டியும் கண்டித்தும் கடிதமொன்றை எழுதியுள்ளார் எம். ஏ. சுமந்திரன்
மேற்படி கடிதத்தின் பிரதி தமிழ் ஊடகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது. (விபரமான செய்தி உள்ளே 6ம் பக்கத்தில்)

# மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் Babikian, Tendercare முதியோர் இல்லத்திற்குச் சென்று தனது அனுதாபங்களைத் தெரிவித்தார்



கனடாவின் ஒன்றாரியோ மாகாண அரசின் ஸ்காபுறோ அஜின்கோர்ட் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் திரு அரிஸ் பாபிகியன் நேற்று திங்கட்கிழமை தனது தொகுதியில் அமைந்துள்ள சில தினங்களுக்கு முன்னர் சென்று அங்கு கொரோனா நோய்த் தொற்று காரணமாக மரணித்த பலரது இழப்புக்கள் தொடர்பாக தனது அஞ்சலியைத் தெரிவித்துக்கொண்டார்

அவர் அங்கு தங்கியிருக்கும் முதியோர் மற்றும் அவர்களது உறவினர்கள் ஆகியோரோடு மிகவும் கவலையோடு உரையாடுகையில், இந்த முதியோர் நிலையத்தில் இடம்பெற்ற இழப்புக்களுக்காக நான் மிகவும் வருந்துகின்றேன். இதற்கு முன்னர் நான் பல தடவைகள் இங்கு வந்து இங்கு வதியும் முதியோர் மற்றும் நண்பர்களோடு கொண்டாட்டங்களில் கலந்து கொண்டுள்ளேன். பலருடைய பிறந்த நாள் விழாக்கள் மற்றும் மகிழ்ச்சியான தருணங்களில் நான் அவர்களோடு இருந்திருக்கின்றேன்.

ஆனால், தற்போது நிகழ்ந்துள்ள சோகமான இழப்புக்கள் என்னை மிகவும் பாதித்துள்ளன. இந்த முதியோர் நிலையத்தில் கடமையாற்றும் பல பணியாளர்கள் மற்றும் சேவை வழங்குபவர்கள் ஆகியோரிடம் மகிழ்ச்சியாக உரையாடியிருக்கின்றேன். ஆனால் அவர்களும் இந்த வகையான இழப்புக்களால் அதிர்ச்சியடைந்துள்ளதை நான் கண்டு கவலையடைகின்றேன். இந்த இழப்புக்களால் மிகவும் பாதிக்கப்பட்டு கவலைக்குள்ளாகியுள்ள முதியோர்களின் உறவினர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு எனது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த நெருக்கடியான நேரத்தில் பெரும் அழிவுகளால் பாதிக்கப்பட்டுள்ள அவர்களின் துக்கத்தில் நானும் பங்கெடுக்கின்றேன். மேலும் இங்கு உயிரழந்த 43 முதியவர்களின் ஆத்மா சாந்தியடைய நான் பிரார்த்திக்கின்றேன்." என்று தெரிவித்தார். (விபரமான செய்தி உள்ளே 8ம் பக்கத்தில்)

Dream Design Build
Paramount Custom Homes Ltd.
416-268-5296
www.paramountcustomhomesltd.net
TARION
Incredible Quality
Quick Turnaround
Competitor Prices

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca